மே 2002 இதழ் 2

# இளைய சக்தி

## YOUNG POWER



**வெளியீடு**

*கல்லோயா இளைஞர் விளையாட்டுக் கழகம்*

**இம்புல்பிட்டி கல்லோயா**

**நாவலப்பிட்டி - இலங்கை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**- சிந்தனை, சொல், செயல் புதிது -**

தூயசிந்தனை

தூரநோக்கு

திடமான மனவுறுதி

இளைய சக்தி

# "இளைய சக்தி" - இதழ் 2

## Young Power

மே. 2002

இளைய சக்தி இனையற்ற சக்தி - நாளைய உலகை நல்லதாய் அமைப்போம்


வெளியீடு -

கல்லோயா இளைஞர் விளையாட்டுக் கழகம்

ஓவியம் -

ஜெயா

கணினி வடிவமைப்பு -

**P.** ரவிக்குமார்

அச்சுப்பதிப்பு -

**DCS-** நாவலப்பிட்டி.

தொடர்பு -

இம்புல்பிட்டி, கல்லோயா

நாவலப்பிட்டி

இலங்கை.


போற்றுவார்
போற்றட்டும்
புழுதி வாரி
தூற்றுவார்
தூற்றட்டும்

ஏற்றதொரு
கருத்தென்றால்
எடுத்துறைபோம்

எவர்வரினும்
நில்லோம்
அஞ்சோம்

கவிஞர் கண்ணதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதை தெரிகிறது பயணம் தொடர்கிறது......
## ஓர் முன்னுரை!

வணக்கம் !

"இளைய சக்தி" கழகத்தின் நான்காவது ஆண்டில் வெளியிட்ட இதழில் சந்தித்து கழகத்தின் இதழ் ரீதியில் இவ் இதழில் சந்திக்கின்றேன்.

கடந்த "இளைய சக்தி" இதழ் சிறப்பிதழாக வெளிவந்தது அவ் இதழ் சுமந்த உள்ளடக்கம், சமூக வெளிபாடுகளில் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்தியது. இவ்வாறான இதழின் தேவை, ஆக்கபூர்வ கருத்து வெளிப்பாடுகளின் அவசியம் நன்கு உணர்த்தப்பட்டமையின் காரணமாக "இளைய சக்தியின்" நீண்ட ஆயுள் வேண்டி கட்டளைகள் பல முன் வந்தன.

இளைய சக்தி தொடர்ந்து வருடாந்தம் வெளிவரும். படிப்படியான வளர்ச்சி நிலை, பருவ கால இதழாக, மாத இதழாக ஏன்? இன்னும் இன்னும் வளர்ச்சி பெறும் என்ற நம்பிக்கை எம்மில் இருக்கிறது.

தற்போது "இளைய சக்தி" பெரிதும் மலையக இளைஞர்களின் சக்திகளை எடுத்துறைக்க ஏதுவாக அமையாவிட்டாலும், கழக செயற்பாட்டில் முக்கிய தடமாக அமையும் என்பதோடு, மலையக இளைஞர்கள் ஒன்றினைந்து இந்த சமூகத்தின் நிலைமாற்றமடைய அனைவரும் ஒன்று திரழ வேண்டும் என்ற செய்தியை இந்த மலை முகடுகளிடையே எடுத்துச் சென்று ஓர் எதிரொலிப்பை ஏற்படுத்தும் என நம்புகின்றோம்.

பிரதேச ரீதியில் இயங்கும் இளைஞர் அமைப்புகள் அனைத்தும் ஒன்றினைந்து சமூக முன்னேற்ற வேலைத்திட்டம் வலைப்பின்னல் செயற்பாட்டில் முன்னெடுப்பது மிக மிக அவசியமானதே, அந்த வகையில் தான் இப்பிரதேசத்தில் இளைஞர்கள் ஒன்றினைந்து இந்த மலையக சமூகம் குறித்த அபிலாஷைகளை நடைமுறைப் படுத்தி வருவதோடு மலையக இளைஞர் அமைப்புகளின் வலைப்பின்னல் செயற்பாட்டிற்கு எமது ஆதரவான கருத்தினை வெளிப்படுத்துவதோடு, ஒன்றினைக்கும் செயற்பாட்டிற்கு அடுத்த கட்டமாக நாம் முயன்று வருகின்றோம் என்ற செய்தியினையும் இவ் இதழில் வெளிப்படுத்துகின்றோம்.

பல காரணிகள் எம் சமூகத்தில் இளைய சக்தி சக்தியிழக்க சாதகமாகவே அமைகின்றது. அவைகளை முறியடித்து உன்னத நிலைப்பெற்று "சரிநிகர் சமானம்" காண சமூக உணர்வு பூர்வ இளைஞர்கள் ஓர் உயரிய சிந்தனையில் ஒன்றினைய வேண்டியது கட்டாயமாகும்.

இவற்றுக்கான ஆலோசனைகள், கருத்துரைகள் என்பவற்றை எமது அமைப்பு சகல மட்டத்தினரிடமிருந்து எதிர்பார்கின்றது. இவற்றுக்கான ஆலோசனைகள், வழிகாட்டல்கள் என்பவற்றை எமது கழகத்திற்கு வழங்கி இப்பணி சிறம்பட அமைய தங்களது பங்கினை வழங்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இனிவரும் காலங்களில் உன்னத உயரிய பணிகளை மேற்கொள்ள "இளைய சக்தி" கல்லோயா இளைஞர் விளையாட்டுக் கழகம் என்பன சிறந்த அத்தியாயங்களை தோற்றுவிக்க நம்பிக்கை வழிகாட்டுவதுடன் தெளிவான எங்கள் பயணமும் நம்பிக்கையோடு தொடர்கிறது.

**அ. லெட்சுமணன்**
*தலைவர்*
*கல்லோயா இளைஞர் விளையாட்டுக் கழகம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லோயா இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் செயற்பாடுகள் ஓரு நோக்கு.

எஸ். தியாகராஜா - செயலாளர்

கல்லோயா இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் வரலாற்று ரீதியிலான ஓர் பார்வையை கழகத்தின் நான்காவது வருடத்தில் வெளியிட்ட இளைய சக்தி மலரில் பார்வையிட்டோம். வரலாற்றோடு கழகத்தின் தொடர் செயற்பாடுகளையும் அறிவதற்கு அம்மலர் பெரிதும் சான்றாக அமைகின்றது.

கழகத்தின் செயலாளர் என்ற வகையில் கழகத்தின் தொடர் செயற்பாடுகளை பட்டியல் படுத்தும் போது.

**1. விளையாட்டு.**

- விளையாட்டுப் போட்டி/சுற்றுப் போட்டிகளை ஏற்பாடு செய்தல்.
- நட்புறவிலான போட்டி நிகழ்வுகள்.
- அரச மட்டி பொது அமைப்புகளின் ஏற்பாட்டிலான விளையாட்டு போட்டிகளில் பங்கேற்றல்.

**2. கலை நிகழ்வுகள்.**

- கழக அங்கத்தவர்களின் கலைத்திறமைகளை வளர்க்கும் கலை நிகழ்வுகள் ஏற்பாடு.

**3. இலக்கியம்**

- இலக்கிய போட்டிகள்
- இலக்கிய கலந்துரையாடல்கள்

**4. பொதுப் பணிகள்**

- தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சிடம் வேண்டு கோள் விடுத்து கல்லோயாவிற்கு மின்சார பெற வழி வகுத்தது.
- கலாசார மண்டபம் அமைப்பதற்க்கான ஆரம்பகட்ட முயற்சிகள்.
- மைதானம் அமைப்பதற்கான ஆரம்ப கட்ட முயற்சிகள்.
- கலாசார நிகழ்வுகளில் ஒத்துழைப்பு வழங்குதல்.
- பாடசாலை அபிவிருத்திகளுக்கு, விழாக்களுக்கான ஒத்துழைப்புக்கள்.
- ஏனைய அமைப்புகளின் செயற்பாடுகளுக்கான ஒத்துழைப்பு பணிகள்.
- சமூக அக்கறையில் உன்னத பங்கினை வழங்குவோரை பாராட்டி கௌரவித்தல்.

**5. கல்வி**

- வருடாந்தம் மே 5ம் திகதி கழக தினமாக பிரகடனப்படுத்தி இம்புல்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த
  1. 5ம் தர புலமைப் பரிசில்
  2. க. பொ. த. சா/த
  3. க. பொ. த உயர் தரம் சித்தி பெறும். மாணவர்களை பாராட்டுதலுடன் கல்வியோடு தொடர்பு எனைய உதவிகள்.
- பாடசாலைகளுக்கு பொதுவான உதவிகள்.

**6. வெளியீடு**

- கழகத்தின் வெளியீடாக "இளைய சக்தி" என்னும் பெயரில் வெளியீட்டை பிரகடனப்படுத்தி மலர்/சஞ்சிகை வெளியீட்டு முயற்சிகள்.

இவ் வகையில் கல்லோயா இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதோடு தொடரும் காலங்களில் எமது செயற்பாட்டை விருத்தி செய்து மென்மேலும் இவ்வமைப்பின் செயற்திட்டங்கள் நிறை வெய்த நம்பிக்கையுடன் உறுதி பூண்டுள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகமும், மலையக இளைய சமூகமும்

**அ. லெட்சுமணன்**

1824ம் ஆண்டு தொடக்கம் காலந்தோறும் வெள்ளையர்களால் அழைத்துவரப்பட்ட இந்திய வம்சாவளி தமிழர்களின் கூட்டம் மலையகம் என்ற கௌரவப்பெயரால் அழைக்கப்படுகின்றது. இந்திய மண்ணிலிருந்து புலம்பெயர்ந்த இந்த மக்கள் கூட்டம் இலங்கையில் இருநூறு ஆண்டுகளை நிறைவு செய்ய இன்னும் சில ஆண்டுகளை மட்டுமே கடக்க வேண்டியிருக்கிறது.

காலம் காலமாக அடிமைத்தனத்திலிருந்து வந்த மலையக சமூகம் ஏனைய சமூகத்திற்கு நிகரான நிலையினை பெறாத நிலை மிகவும் கசப்பான விடயமாக இருக்கின்றது.

ஒரு மனித கூட்டம் சமூக, பொருளாதார, கல்வி, கலாசார, அரசியல் ரீதியில் உயர்ச்சி பெறவும்,அதன் தொன்மையான விழுமிய அம்சங்கள் தொன்று தொட்டு வளர்ச்சி பெறச் செய்ய வேண்டிய அளப்பரிய பொறுப்பு அச் சமூகம் சார்ந்த தலைமுறையினரை சாறும். அந்த வகையில் எம் மலையக சமூகம் குறித்த பார்வை ஏனைய சமூகத்தோடு ஒப்பிடுகையில் நிகர் நிலை பெற இன்னும் எத்தனைப் படிகளை தாண்ட வேண்டிய கட்டாயம் இருக்கின்றது?

உலகம் கிராமமாக சுருங்கிய நிலையில் எம் மலையக சமூகத்தின் நாளைய விடியல் குறித்து சிந்திக்க வேண்டிய ஒரு கட்டாயம் நிலவுகின்றது. இந்த நாளைய விடியலில் பங்கேற்க போகும் இளைய சமூகத்தினரின் நிலையையும் ஆயத்த நிலையைப் பற்றி யோசிக்க வேண்டியுள்ளது. நிகர் நிலைப் பெற வேண்டிய இந்த பகீரத பிரயத்தனத்திற்கு எம் இளைய சமூகத்தினரின் பங்கு பற்றி ஆராய்கையில் பின்வரும் நிலைமை காணப்படுகின்றது. பொதுவாக இப்பொறுப்பு நிலைப்பற்றி இளைய சமூகத்தினரை இனம் காண்கையில் மலையக இளைய சமூகத்தவரில் 25% பங்கினர் நகர மயப்படுத்தலில் விலகி பெருந்தோட்டத்துறை சார்ந்த சலுகைகளை தட்டிப்பறித்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் மட்டுமே பெருந்தோட்ட சமூகம் என சாயம் பூசிக் கொள்கிறார்கள்.

எஞ்சியுள்ள 75% பகுதி இளைய சமூகம் மீது பார்வையை செலுத்தும் போது

- கல்வியில் உயர்ந்த பெருந்தோட்ட துறையை சார்ந்த இளைய சமூகம் தோட்ட சமூகத்தை விட்டு இடைவிலகி சுய நல போக்கில் ஒதுங்கிக் கொள்ளுதல்.
- சிறுவயது முதல் O/ ஓரளவு படித்த இளைஞர் சமூகம் தலைநகரை நோக்கி படையெடுத்து சென்று இச்சமூகம் மீது சிந்தனையை விடுத்து ஒதுங்குதல்
- போதைப் பொருளுக்கு அடிமையாகி தன்னைப் பற்றியே அக்கறை கொள்ளாமை.
- க.பொ.த சா/தரம் வரைப்படித்த O/ ஓரளவு படித்த பெண்கள் ஆடைத்தொழிற் சாலைகளில் வேலை செய்ய தலைநகருக்கு படையெடுத்து நாகரீக மோகத்தில் தலைநகர இளைஞர்களுக்கு பலியாகுதல்.
- வெளிநாட்டு வேலைவாய்ப்பு/இதர பிரச்சினைகள்

போன்ற கவலைக்கிடமான தன்மைகளில் சக்தி இழந்து மலையக இளைய சமூகம் இன்னுமொரு அரைவாசி பங்கினை உள்வாங்கிக் கொள்கிறது. இந்நிலைப் பெற்றவர்கள் ஒரு போதும் இச்சமூகம் மீது அக்கறை காட்டப் போவதில்லை. நகர மய சூழல், அத்தோடு இச் சமூகத்திலிருந்து இடைவிலகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்கள் என்பவற்றை உள்ளடக்கி சமூக பற்றற்றோர் 75% சதவீத நிலையில் காணப்படுவது கவலைக்கிடமான உண்மையாகும். இவைகளை தவிர்த்து 25% சதவீதமான இளைய சமூகத்தினர் இச்சமூகம் மீது அக்கறையினைக் கொண்டு முனைப்பாக செயற்பட விரும்பினாலும் இவர்களும் பின்வரும் இடர்களை முகங் கொடுக்கத்தான் செய்கிறார்கள்.

- தோட்டங்களில் அரசியல் தொழிற்சங்க அழுத்தங்கள் பொதுவான பணிகளை இளைய சமூகம் முன்னெடுப்பதில் ஏற்படும் சிக்கல்கள்.

- குறுகிய எண்ணங்களினால் இளைய சமூகத்திற்கு மூத்தோர் ஒத்துழைக்காமை.

- சமூக மீது அக்கறை கொண்ட இளைய தலைமுறையினரிடையே தொடர்பாடல் இன்மை

- தொழில் இல்லா பிரச்சினையினால் துவளும் பொருளாதார தன்மை

- இளைஞர்கள் மீது கட்டவிழக்கப்படும் அடாவடித்தனமும், தவறான வழி நடத்தல்

போன்றன விடயங்கள் இளைய சமூகம் சக்தியிழக்க பெரிதும் துணைநிற்கின்றது.

இவ்வாறான துர்பாக்கிய நிலைகளை தன்னம்பிக்கை கொண்டு உடைத்தெறிய வேண்டிதும், இவற்றுக்கான பரிகாரங்களை மேற்கொள்ள வேண்டியது முற்போக்கு எண்ணம் கொண்ட இந்த இளைய சமூகத்தின் பெறும் பணியாக அமைகின்றது.

இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில் மலையகத்தில் தொடர்பாடல் துறையின் விருத்தியின்மை பெரிதும் சமூக பின்னடைவிற்கு ஓர் காரணமே. தொடர்பாடல் துறை விருத்தி நிலை பெற ஆவன செய்துடன், தொட்டுக்காட்டப்படும் இப்பிரச்சினைகள் மென்மேலும் விரிவாக ஆராயப்பட்டு அவற்றுக்கான பரிகாரங்களை செய்ய வேண்டியதும் விரைவாக நிறைவேற்ற வேண்டியதும் காலத்தின் தேவையாகும்.

இளைஞர் அமைப்புக்கள், ஒன்றினைந்து இவற்றுக்கான பரிகாரங்களை கண்டறிந்து அவற்றுக்கான மாற்றுத் திட்டங்களை சமூக அமைப்புக்கள், ஊடாக அரசியல் தலைமைகள் என்பன நிறைவேற்ற இளைஞர் அமைப்புக்கள் அழுத்தம் கொடுக்க வேண்டியது இன்றைய அவசிய, அவசர தேவையாகவே அமைகின்றது.

**தன்னம்பிக்கையும், விடாமுயற்சியுமே சகல வெற்றிகளையும் நிர்ணயம் செய்கின்றது.**

**அ.லெ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகக் கல்வியின் எதிர்காலம்

தை. தனராஜ்
பணிப்பாளர் தேசிய கல்வி நிறுவகம் - தமிழ்துறை

1970களுக்குப் பின்னர் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் மலையகக் கல்வி விருத்தியில் ஒப்பீட்டளவில் கரிசனை காட்டி வந்துள்ளன. அதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். அவற்றுள் முக்கியமானது மலையக மக்கள் 1940களில் இழந்த அரசியல் உரிமைகளை 1970களிலிருந்து படிப்படியாகப் பெற்றுக் கொண்டமையாகும். மலையக மக்களின் "வாக்கு வங்கி" பெரும்பான்மையின் அரசியல்வாதிகளுக்கு காலத்துக்குக் காலம் தேவைப்படுகிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள நெருக்கடியும் கூட மலையக மக்கள் பால் அரசியல்வாதிகள் கரிசனை கொள்வதற்கு ஒரு துணைக் காரணியாகவிருக்கலாம்.

பிரச்சினைகள், முரண்பாடுகள் கூர்மையடையும் போது அது பெரும்போராட்டமாக வெடித்துக்கிளம்புவது வரலாற்றின் நியதியாகும். இன்றைய சாதகமான அரசியல் சூழ்நிலைய மலையகக் கல்வி மேம்பாட்டுக்கு ஏற்புடையதாக மாற்றிக்கொள்வதில் மலையகத் தலைமைகளும் மலையகக் கல்வியில் அக்கறை கொண்டோரும் தொலைநோக்குடன் செயற்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இதற்கு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய விடயம் மலையகக் கல்வியின் எதிர்காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு தந்திரோபாய திட்டத்தை (Strategic Plan) வடிவமைப்பதாகும். இத்திட்டத்தில் குறுங்கால, மத்தியகால, நீண்டகாலத் திட்டங்கள் உள்ளடக்கப்பட வேண்டும். இத்தகைய திட்டம் ஒன்றினை உருவாக்க வேண்டுமானல் மலையகக் கல்வி தொடர்பாக ஒரு தொலை நோக்கினை (Vision) உருவாக்கிக் கொள்வதும் அவசியமாகும்.

இவ்வாறான ஒரு முழுமையான கல்வி அபிவிருத்தித் திட்டத்தை உருவாக்குவதற்கு முதற்படி தற்போதைய மலையகக் கல்வி நிலையை பகுப்பாய்வு செய்வதாகும். மலையகக் கல்வி பற்றிய பூரணமான தகவல்கள் இல்லை. இத்தகவல்களை ஒன்றுதிரட்ட வேண்டும். உதாரணமாக மலையகத்தில் பணிபுரிகின்ற ஆசிரியர்களில் எத்தனை பேர் மலையகத்தவர்கள், அவர்களது கல்வித் தகைமைகள் யாவை, அவர்களது வாண்மை விருத்தித் தேவைகள் யாவை போன்ற விபரங்கள். திரட்டப்படவேண்டும், அதேபோல மாணவர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள் போன்றோரின் பூரணமான தகவல்கள் திரட்டப்படவேண்டும், ஆய்வு பூர்வமான தகவல்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்படாத எந்த திட்டமும் தனது குறிக்கோள்களை அடையமுடியாது.

மலையகம் பொதுவாக கல்வியில் பின்தங்கி இருந்தாலும் மலையகத்துகுள்ளேயே வேறுபட்ட நிலைமைகள் இன்று காணப்படுகின்றன. ஒப்பீட்டளவில் மத்திய மலைநாட்டில் காணப்படும் கல்வி அபிவிருத்தி மலைநாட்டின் ஓரப்பகுதிகளில் காணப்படவில்லை. கடந்த இரு தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட கல்விச் செயற்பாடுகள் கண்டி, நுவரெலியா முதலிய மாவட்டங்களிலேயே முனைப்பாகக் கொண்டிருந்தன. இம்மாவட்டங்களில் உட்கட்டமைப்பு தேவைகள் கணிசமான அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளன. எனவே இங்கு பண்புத்தரவிருத்தி நோக்கிய செயற்பாடுகளுக்கு முதன்மை அளிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் ஏனைய பகுதிகளில் உட்கட்டமைப்பு தேவைகளை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எந்தவொரு கல்வி முறையிலும் மாணவர்களுக்கு அடுத்து மிக முக்கியமான பகுதியினர் ஆசிரியர்களே ஆவர். இந்நாட்டில் மிகவும் மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவது மலையகத்தில்தான். இப்போது பணிபுரிகின்ற ஆசிரியர்கள் தொகையை இரட்டிப்பாக்கினால்தான் மலையகத்தில் மாணவர் ஆசிரியர் விகிதத்தை தேசிய விகிதாசாரத்துக்கு சமமாக்க முடியும். இன்று க.பொ.த. உயர்தரத்தில் சித்தியெய்திய மாணவர்கள் கணிசமாக உள்ளனர். இவர்களைக் கொண்டு ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியும் அதே நேரத்தில் மலையக ஆசிரியர்களின் வாண்மை விருத்தி தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும். அதற்கு முதற்படியாக தகைமையும் அரப்பணிப்பும் கொண்ட முதன்மை ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். அவர்களைக் கொண்டு மலையக ஆசிரியர்களுக்கு தொழில்சார் உதவிகளை வழங்குவதற்கு ஆவண செய்தல் வேண்டும்.

ஆசிரியர் வாண்மை விருத்தியில் தொடர் கல்வி (CONTINUING EDUCATION) மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றது. இக்கல்வியை வழங்குவதில் பல்கலைக்கழகங்களும், தேசிய கல்வி நிறுவகமும் முக்கியமான நிறுவனங்களாகும். இவற்றில் கல்வியில் இளமாணி, முதுமாணி (BEd, MEd) பட்ட கற்கை நெறிகளில் பங்கு கொள்ளும் மலையக ஆசிரியர்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையினரே. இந்நெறிகளில் நியாயமான அளவு மலையக ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அதே போல மலையக பாடசாலைகளில் பொருத்தமான அதிபர்களை நியமித்தல், அவர்களுக்குத் தேவையான முகாமைத்துவ பயிற்சிகளை வழங்குதல். அவர்களது. நிர்வாக செயற்பாடுகளுக்கு உதவி செய்தல் ஆகியவையும் முக்கியமானவை.

மலையக கல்வியை நிர்வகிப்பதில் மலையகத்தவர் பங்குகொள்ள வேண்டுமெனில் போதுமான அளவுக்கு கல்வி அதிகாரிகள் நியமிக்கப் படல் வேண்டும். அத்துடன் அவர்களுக்கு கல்வி முகாமைத்துவத் துறையில் பயிற்சி அளிக்கப்படவும் வேண்டும்

இவ்வாறான அடிப்படையான விடயங்களில் கவனம் செலுத்தாமல் மலையகக் கல்வியை விருத்தி செய்துவிட முடியாது. இப்போது தேசிய மட்டத்திலும் பின்பற்றப்படும் கல்விக் கொள்கைகள் மலையகத்தில் காணப்படுகின்ற விஷேட பிரச்சினைகளை கவனத்திற்கொண்டிருக்கவில்லை, பொருந்த்தமான, உடன்பாடான கொள்கைத் தெரிவுகளின்றி ஒரு பின்தங்கிய மக்கள் கூட்டத்தின் கல்வியை முன்னேற்றிவிட முடியாது.

மலையகக் கல்வி பின்தங்கியுள்ளது என்பதை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளும் தேசிய கல்வி ஆனைக்குழு (1992) ஏனைய பிரதேசங்களில் காணப்படுகின்ற பின்தங்கலையும் ஒரே கூடைக்குள் போட முயல்கிறது. இது மிகவும் துரதிஸ்டமானது ஏனைய பிரதேசங்களில் காணப்படுகின்ற கல்வி பின்தங்கல் நிர்வாகம் சார்ந்தது. ஆனால் மலையகத்தின் பின்தங்கல் பின்பற்றப்பட்ட பாரபட்சமான கல்விக் கொள்கைகளின் நேரடி விளைவாகும். பின்தங்கிருத்தல் பொதுவாக இருந்த போதும், அதற்கான காரணங்கள் வேறுபட்டவை எனவே வேறுபட்ட நோய்களுக்கு ஒரே மருந்தை கொடுத்து குணமாக்க முயல்தல் பேதமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையகக் கல்வியை மேம்படுத்த வேண்டுமெனில் குறிப்பிட்ட காலத்துக்கு உடன்பாடான பாரபட்சம் (POSITIVE DISCRIMINATION) காட்டும் கல்விக் கொள்கைகள் பின்பற்றப்படல் வேண்டும். இந்தியா உட்பட பல நாடுகளில் பின்தங்கிய பிரதேசங்களையும் இனக்குழுக்களையும் தேசிய மட்டத்துக்கு உயர்த்துவதற்காக இவ்வாறன கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன. இவ்வாறான ஒரு கொள்கையை அரசாங்கம் பின்பற்ற வேண்டுமெனில் அதற்காக மலையகத் தலைமைகள் ஒன்றுபட்டு மிகவும் கடினமாக உழைக்க வேண்டும், உதாரணமாக கடந்த நான்கு தசாப்தங்களில் பல்கலைக்கழகங்களில் மலையக மாணவர்களின் பங்குபற்றல் ஒரு வீதத்தை விட குறைவானதாகும். பட்டதாரிகளின் எண்ணிக்கைக்கும் ஒரு சமூகத்தின் கல்வி மேம்பாட்டுக்கும் நெருக்கமான தொடர்பு உள்ளது.

உடன்பாடான கொள்கையைப் பின்பற்றாமல் பல்கலைக்கழகங்களில் மலையக மாணவர்களின் சேர்வு விகிதத்ததை கூட்ட முடியாது. உண்மையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக் குழு பின்பற்றும் தகவல் கொள்கையின் காரணமாக மலையகத்தைச் சார்ந்த பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கையைத் துல்லியமாகப் பெற முடியாதுள்ளது. மலையகக் கல்விப் பிரச்சினைகளை சரியான முறையில் சரியான வடிவதில் சரியான இடங்களில் நாம் முன்வைக்க வேண்டுமெனில் அதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும் அவற்றுள் முக்கியமானது.

"மலையகக் கல்விச் செயலகம்" (PLANTATION EDUCATION SECRETARIAT) உருவாக்கப்பட்ட வேண்டும். கல்வி ஆய்வு, கொள்கை உருவாக்கம். நெருக்குதல்களை ஏற்படுத்தல் (LOBBYING) முதலியவற்றை முனைப்பாகக் கொண்டு இச்செயலகம் செயற்படுதல் வேண்டும். இச்செயலகத்தின் சார்பில் வருடாந்த மலையகக் கல்வி மாநாடு (ANNUAL EDUACTION CONFERENCE) நடத்தப்பட வேண்டும். மலையகக் கல்வி ஆர்வலர்கள் தமக்குள் கொண்டிருக்கக்கூடிய வேறுபாடுகளும் இந்த மாநாட்டில் அவர்கள் பங்கு கொள்வதற்கு தடைக்கற்களாக இருக்கக் கூடாது. மலையகக் கல்வியில் ஆர்வம் கொண்ட சகலரும் இம்மாநாட்டில் பங்குகொண்டு தமது கருத்துக்களை முன்வைப்பதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

**முடிவுரை:**

மேற்படி முன்மொழிவுகளை மேலோட்டமாகப் பார்க்கும்போது அசாத்திய்மானவைகளாகத் தோன்றலாம். ஆனால் இவற்றுக்கு செயலுருவம் கொடுக்காமல் மலையகக் கல்வி முன்னேற்றத்தை எண்ணிப்பார்க்க முடியாது மலையக கல்வி மேம்பாடு இரண்டு விடங்களில் தங்கியுள்ளது. ஒன்று அரசாங்கத்தின் அரசியல் உறுதிப்பாடு (POLITICAL WILL) அடுத்தது அத்தகைய உறுதிப்பாட்டினை ஒன்றுபட்டு தொடர்ச்சியாக மேற்கொள்ளும் முயற்கள் இவை இரண்டும் இருக்குமாயின் ஒரு பத்தாண்டு காலத்துக்குள் மலையகக் கல்வியை தேசிய மட்டத்துக்கு கொண்டு வர முடியாவிட்டாலும் ஒரளவுக்கு முன்னேற்றிவிட முடியும்.

அரசியல் தலைமைத்துவம் மாத்திரம் கல்வி அபிவிருத்தியை ஏற்படுத்திவிட முடியாது. அதற்கு சாதகமாக ஒரு கல்வித் தலைமைத்துவத்தைக் கட்டி எழுப்புதல் மிகவும் முக்கியமானது. மலையகத்தில் கட்சி சார்பற்ற ஒரு கல்வித் தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்புவது வரலாற்றின் தேவையாகும். ஒரு சிலர்தான் உள்ளனர். என்ற போதிலும் இன்று பல்வேறு துறைகளிலும் மலையக்தைச் சேர்ந்தோர் பிரகாசிக்காமலில்லை. அவர்களது உதவியுடனும் பங்களிப்புடனும் மலையகத்தில் ஒரு கல்வித் தலைமைத்துவத்தைச் கட்டியெழுப்ப முடியும் அவ்வாறான ஒரு தலைமைத்துவத்தை உருவாக்க மலையகக் கல்வியில் ஆர்வமுள்ள சகலரும் தமது அரசியல் வேறுபாடுகளையும் சித்தாந்த முரண்பாடுகளையும் ஓரளவு புறந்தள்ளிவிட்டு நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் முயற்சி செய்தல் வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும்.


நன்றி - நாடோடிகள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கினி குஞ்சை கொண்டு வா ......

**-ராஜ்பாரதி-**



கவிராஜனே - உன்
வரவை இந்த
மலைமுகடுகள்
எதர்பார்த்திருக்கின்றது.

அதனால் ஒரேயொடு
முறை வந்து விட்டுச்செல்
வரும் போது
அக்கனிக் குஞ்சை
மறவாமல் எடுத்து - வா

இந்த இருள்
முகடுகளுக்கு
வெளிச்சம் தர - அக்கினி
குஞ்சை அவசியமாய்
எடுத்து வா

எட்டைப்புப் புரத்தை விட
ஏற்றமிகு கருப்பொருள்கள்
கவிதைப் புணைய
இருக்கின்றன.

முகில்களால் - மூழ்கிப்போன
இந்த முகடுகளுக்கு
வீரியத்தை
விதத்துறைக்க - உன்
வரவு
வரமாகட்டும்

இன்னுமே - நீ
கூறிய
சரிநிகர் சமானம்

ஏட்டு வடிவில்
மட்டும் ஏற்றுக்கொண்டதை
நீயுமறிவாய்

புறக்கணிப்புகளால்
புறந்தள்ளும்
புழுதி உறவுகளை
துடைத்தெறிய பெருத்தமான
காணங்களை
கொண்டு - வா

வெள்ளைத்துறைகளை
விரட்டிய - உன்
கவிதை போல்
வெந்து தனியும்
வேர்பிடித்த
தமிழகத்தின் தலைமுறை
வாரிசுகளுக்கு
வான்மை புகட்டிட
காணம் கொண்டு வா

மலையகம்
விளையகமாய்
விதப்புறைக்க - வித்திடும்
வினைத்தின் கவிதைகள் கொண்டு
வா

புறம் நிறுத்தப்படும்
நிலை மாறி
ஏற்றமிகு கண்டிட
ஏற்றதாய்
காணம் நீயும்
கொண்டு வா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொத்மலை FM சர்வதேச சமூக வானொலி மலையகத்துக்கு பயன்படுமா?

சர்வதேச ரீதியில் 6வது இடத்தில் இருக்கும் சமூக வானொலியான கொத்மலை FM சில மணித்தியாலங்கள் மட்டுமே தமிழ் நிகழ்ச்சிகளுக்கு நேரம் ஒதுக்கப்படடுள்ளது. மேலும் பிரத்தியேகமாக ஓர் அலைவரிசை பயன்படுத்தபடாமலும் இருப்பதாக அறியமுடிகின்றது.

இவை மலையக சமூக மீது கவனம் செலுத்தி செயற்படுமானால் இன்றைய தகவல் தொழில்நுட்யுகத்தில் மலையகமும் ஓர் அங்கத்தை உயர்த்தி கொள்ள வாய்பாக அமையும்.

இவ் அலை வரிசையைக் கொண்டு இளைஞர் நிகழ்வுகள் சமூக நிகழ்ச்சிகளை மலையக ரீதியில் நடாத்த மலையக இளைஞர்களுக்கு வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்குமாறு, வெகுஜன தொடர்பு சாதன அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், மலையக அமைச்சர்கள் ஆறுமுகன் தொண்டமான், பெ. சந்திரசேகரன் ஆகியோரிடம் இளைய சக்தி வேண்டுகோள் விடுக்கின்றது.

## மலையக மண்ணில்

ஓ. தமிழினமே
ஏன் உறங்கிக் கொண்டிருக்கிறாய்
உன் உணர்ச்சிகள் என்ன செத்து விட்டனவா?
உன் உறக்கத்தை கண்டு உன்னை உரசிப்பார்க்க
உயர்ந்து விட்டார்கள் பேரினவாத பெருச்சாலிகள்
ஏளனம் செய்ய எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்
செல்வந்த ஆசாமிகள்
வெள்ளையனின் வேட்கையின் பால்
வெறுண்டு வந்த எம் வேதனை குரல்
கேட்கவில்லையா?
தேயிலைச் செடியிலே தேய்ந்த எம் மூதாதையர்
சிந்திய முத்துக்கள் யாம்
மலையத்தான் என்பதால் இம்மண்ணிலே வாழ
வழியின்றி மரணித்துக் கொண்டிருக்கிறோம்
அடையாள அட்டையின்றி அடைக்கப்பட்டு எம்
உணர்வுகள் அழிக்கப்படுகின்றது.
அநியாயம் அநியாயம் அநியாயம்!
மலையக தமிழன் என்பவன் மனிதனில்லையா?
அவனென்ன உயிரற்ற ஜடமா?
உரத்துச் சொல் நாளைய உலகின் நாயகனே
தமிழனை எரித்து அவன் உணர்வினை எரித்து
அதில் குளிர் காண நினைக்கும் குண்டர்களே
உறங்கி கொண்டிருக்கிறோம் என்று நினைத்துவிடாதீர்கள்
உறங்கும் எரிமலையாய் இருக்கும் எம்
உணர்வுகள் என்றோ ஒரு நாள் வெடித்து சிதரும்
என்பதை மறந்துவிடாதீர்கள்.

A. செந்தில்குமார் - நாவலப்பிட்டி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடையாள அட்டை

நேற்றைய பொழுது சென்றவர்கள்
இன்று விடியலை நோக்கும் முன்
சிறைப்பிடிக்கப்பட்டார்கள்
தலைவிரித்தாடும் பஞ்சத்தின்
தலையிடி தாங்காமல்
தலைநகருக்குச் சென்றவர்கள்
கூண்டு கிளியாய் அடைக்கப்பட்டார்கள்

ஊதியம் குறைவு!
விலைவாசி உயர்வு!
வாழ்க்கை தாழ்வு!
உயர்ந்திடுவோம் என்றெண்ணியவர்கள்
சிறைவாசம் அனுபவித்தார்கள்
உள்ளதின் எழுச்சிகளை
சிறையின் கழிவறையில் - எச்சிலாய்
உமிழ்ந்தார்கள்
உமிழப்பட்டது எச்சில் அல்ல
உள்ளத்தின் உணர்வுகள்

ஏன் சிறைவாசம்?
அடையாளம் இல்லாததோ!
அட்டைகளின் கடிகளின்
கொடுமையை அனுபவித்து
வெறுத்த நெஞ்சங்கள்
அடையாள அட்டைகளின்
கடிகளை அனுபவிக்கின்றன
தமிழனாக பிறந்தது
அவன் குற்றமா?
பேசும் மொழியில்
பேதமை கூறு போடுகிறது
மொழிகளை உருவாக்கி
வேற்றுமைகளை தோற்றுவித்து
பாகப் பிரிவினையை பிறப்பித்து
நெஞ்சங்களை உருகுலைத்த
தோற்றுவாய்களின் குற்றமே.

இரா. **லோகிதாசன்**
டின்சின் தோட்டம்
பொகவந்தலாவை.

# தாயே...



தாயே
அருகில்
யாருமற்ற நிலையில்
தனிமையின் மடியில்
தலை சாய்த்து
உனக்கொரு
கவிதை எழுதுகிறேன்.
தாயே
உன்னை பிரிந்து
நடைபிணமாய்
வாழ பிடிக்கவில்லை.
என் கவிதை
எப்படி உன்னிடம்
வந்து சேருமோ தெரியாது?
என்னை புரிந்து
என்
எண்ணங்களை அங்கீகரிக்கும்
உறவொன்று இங்கில்லை
என் சோகங்களை
சொல்லி அழ
உன்
மடி தேவை
நீ
அள்ளி அணைத்து
தலை கோதி
மார்போடணைத்து
உச்சி மோர்ந்து
உன் மடி மீது
கிடத்தி
என் சுமைகளையெல்லாம்
தாங்கி கொள்வாய்...!
அந்த
அரவணைப்பு
ஸ்பரிசம்
ரம்மியமான சுகானுபவம்
எனக்கு தேவை
அதனால்
தாயே
என்னிடம் சொல்ல
சொல்லி
உன் முகவரியை
எரிமலையிடமாவது
சொல்லி அனுப்பு

**S. சிவக்குமார்**
கொட்டகலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதை தடை செய்ய வேண்டும்

T. தவராஜ்

மனித உரிமைச்சட்டம், சிறுவர் உரிமைச்சட்டம் என்பன பிதுட்டிக் கொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில், சிறுவர் உரிமைகள் மீறல், சிறுவர் துஸ்பிரயோகங்கள் என்பன வேர்விட்டு வளர்ந்து கொண்டிருக்கின்றது. மனித வாழ்க்கையில் இளம். பராயத்தில் அவனது செயற்பாடுகளும் நடவடிக்கைகளுமே அவனை நல்வழிக்கு இட்டுச்செல்வதும் தீயவழிக்கு இட்டுச் செல்வதுமாக உள்ளது. சிறுவயதில் துள்ளிதிரிந்து கல்விக்கூடங்களில் கல்விப்பயிலவேண்டிய சிறுவர்களை செல்வந்த வர்கத்தினர். செவிலித்தாய் போலவும் வேலையாட்கள் போலவும் ஏன் கண்கொண்டு பார்க்கின்றார்கள், என்று தெரியவில்லை இன்று உலகம் முழுவதும் பொருளாதாரத்தில் பாதிப்புற்ற குடும்பத்தைச் சேர்ந்த சிறுவயதினிலே அநாதரவாக்கப்படுதல் போன்றவைகளே அவர்கள் வேலைக்கு செல்வதற்கு காரணமாக அமைகின்றது.

இலங்கையில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவது பரவலாக இடம்பெற்றாலும் பெரும்பாலும் மலையகப்பகுதிகளிலேயே அதுவும் தோட்டப்பகுதிகளில் வாழ்பவர்களது பிள்ளைகளே கூடுதலாக வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர். சிறுவயதிலே அநாதரவாக்கப்படுவனால் தங்களது வயிற்றுப்பசிக்காகவும், சிலர் வேளைக்கு சென்று பண்டிகைக்காலங்களில் தோட்டப்புறங்களுக்கு செல்லும்போது வேலை செய்யும் பகுதிகளில் உள்ள கலாச்சாரங்களுக்கேற்ப தங்களை இணைப்புபடுத்திக் கொண்டு வரும்போது ஏனைய சிறுவர்களும் அவர்களைப்போல வாழவேண்டும். அழகாக உடை அணிய வேண்டும. இதுதான் வாழ்க்கை என்று வேலைக்கு செல்லுகின்றார்கள். சில பெற்றோர்களது மூட நம்பிக்கை காரணமாக அதாவது வேலை செய்யும் இடங்களில் இருந்து விடுமுறைக்காலங்களில் வேலை செய்பவர்கள் வீடு திரும்பும் போது வேலைக்கு அமர்த்தும் செல்வந்த வர்கத்தினர் தமது வாகனங்களில் கூட்டிக்கொண்டுவரும்போது ஏனைய பெற்றோர்களுக்கும் பண மேகம் ஏற்படுவதாலும், தோட்டப்புறங்களில் வாழும் தொழிலாளர்கள் தமது பொருளாதார சுமையை தாங்கிக் கொள்ளமுடியாத நிலையில் தமது பிள்ளைகளை வேலைக்கு தலை நகர பகுதிகள் வேலைக்கு அனுப்பி வைக்கப்படுவதினை இன்று காணக்கூடியதாக உள்ளது. இதில் ஒரு பகுதியில் வறுமை என்று கூறிக்கொண்டு சிறுவர்களின் வேதனத்தை மாதாமாதம் வாங்கி சாரயக்கடைக்கு கொடுப்பவர்களாகவும், ஒரு பகுதியினர் இந்த சிறுவர்களின் உழைப்பினை தக்க முறையில் பயன்படுத்தி குடும்பத்தை நடத்துபவர்களாகவும் உள்ளனர். இவ்வாறு சிறுவர்களை அமர்த்தி பணம் பெறுவது தற்காலிக நிவரணமாக இருப்பினும் எதிர்காலத்தில் கல்வி கற்ற சமூகத்தின் உருவாக்கத்தை மலையகத்தில் காணமுடியாமல் போகும் நிலைக்கு இட்டுச்சென்றுவிடும்.

பிள்ளைகளை சிறந்தவர்களாகவும், சுதந்திரமானவர்களாகவும் வாழ வழி செய்ய முடியாதவர்களாகவும் உள்ளவர்களுக்கு பிள்ளை தேவையில்லை. சிறுவயது முதலே எஜமான்களிடம் அவர்கள் அனுப்பப்படுவதால் அவர்களின் திறமைகள் மழுங்கடிக்கப்படுவதுடன் தம்மை ஒடுக்கப்பட்டவர்களாகவே கருதக் கூடிய நிலைக்கு இட்டுச் செல்கின்றது. பிரழ்வு நடத்தைகளுக்கு அது வழிவகுப்பதுடன் இளைஞர், யுவதிகளாக வளர்ச்சி அடையும் தறுவாயில் அவர்களை தீய வழிகளுக்கும் தீய நடத்தைகளுக்கும் இடடுச் செல்கின்றது. சிலர் சிறுவயதிலேயே வேலைக்கமர்த்தப்படும் போது வேலை செய்யும் இடங்களில் உள்ளவர்களாலேயே பாலியல் இம்சைக்கு உள்ளாக்கப்படுவதால் அவர்களது. வாழ்க்கையே கேள்விக்குறியாகின்றது. அதே நேரம் சிலர் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவதாகவும் காணக்கூடியதாக உள்ளது. 18 வயதிற்கு உட்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர், சிறுமியர், என கணிக்கப்படுவதும் 14 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களை வேலைக்கமர்த்துவது தடைசெய்யப்பட்டிருப்பினும் படித்த செல்வந்த கூட்டம் தங்களது சுயலாபம் கருதி இதனை ஒரு பொருட்டாக எடுக்கவில்லை மலையகத்தில் புதியதொரு இளைய சமூகம் உருவாக்கம் அடையாமைக்கு சிறுவயதில் அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுதலே முக்கிய காரணமாக உள்ளது. மலையகத்தை பாதளத்திற்கு இட்டுச் செல்வதில் பண ஆசை படைத்த ஒரு இடைத்தரகர் கூட்டம் சிறுவர்களை வேலைக்கமர்த்தி தரகு கூலிகளை பெறுவது ஒரு வியாபாரமாக இன்று இடம்பெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளிடம் சிறுவயதில் என்னென்ன திறமைகள் விருத்தியடைந்துள்ளது. எவ்வாறு அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும், அவர்களை கல்வியின் பால் தூண்டவேண்டும். இந்த தார்மீக பொறுப்புக்குறியவர்கள் பெற்றோர்களே, பொருளாதாரத்தின் பின்னடைவின் காரணமாகவும் அடிப்படையில் கல்வியைப் பற்றிய ஒரு தெளிவான நோக்கமும் இல்லாத காரணத்தினாலே பெற்றோர்கள் இந்த தார்மீக பொறுப்பிலிருந்து விடப்பட வேண்டிய நிலை உருவாகியுள்ளது. இந்த தவறினை நாளைய சந்ததியினரும் அனுமதிக்க கூடாது.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சமவாயம் 1989ம் ஆண்டு ஐக்கிய நாடு பொதுச்சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 1991ம் ஆண்டில் இலங்கை அரசு அதனை உறுதிப்படுத்தியும் உள்ளது. இந்தச்சமவாயம் சிறுவர்கள் சிறப்பான சிறப்புக்குரியவர்கள் என்பதனை ஏற்றுக்கொண்டு அவர்களுக்குரிய நன்மைகள், அவர்கள் பெறவேண்டிய பாதுகாப்பு ஆகியவற்றை வரையரைப்படுத்துகிறது. அதில்

- ❖ சமவாயத்தில் சொல்லப்பட்ட எல்லா உரிமைகளையும் அனுபவித்தல் வேண்டும்.
- ❖ சிறுவர்களை எல்லாவகை பாதுகாப்பலிருந்தும் காப்பதும் அவர்களின் உரிமைகளை பரப்ப ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதும் அரசின் கடமையாகும்.
- ❖ சமவாயத்தில் அடங்கியுள்ள உரிமைகளை நிச்சயமாக்குவதற்கு அரசாங்கம் தன்னிலான அனைத்தையும் செய்தல் வேண்டும்.
- ❖ குழந்தைகளுக்கு அதன்பரினாம வளர்ச்சிக்கு இசைவான முறையில் வழிக்காட்டும் பொறுப்பு பெற்றோருக்கும். குடும்பவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் உண்டென்பதை அரசாங்கம் மதித்தல் வேண்டும்.
- ❖ ஒவ்வொரு குழந்தைக்கும் உயிர்வாழும் உரிமை பிறப்போடு கூடிய தொன்றென்பதை ஓவ்வாருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதன் உயர்வையும் மேப்பாட்டையும் உறுதிப்படுத்தும் கடப்பாடு அரசாங்கத்தினுடையது ஆகும்.
- ❖ ஒரு சிறுவன் அல்லது சிறுமி தன் சொந்த வீட்டிலோ நாட்டிலோ வாழ்வது பாதுகாப்பற்றது என்பதால் அவ்விடத்தைவிட்டு அகன்று அநாதையனால் விஷேட பாதுகாப்பும் உதவியும் பெறும் உரிமை அச்சிறுவர்கள் அல்லது சிறுவன் அல்லது சிறுமிக்கு உண்டு.

என்பன உற்றிட்ட இன்னும் பல்வேறு விடங்களை சமவாயத்தின் உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை அரசு இதனை உறுதிப்படுத்தியுள்ள போதும் மலையகத்தில் சிறுவர் உரிமைகள் பற்றியும் சிறுவர் உரிமை மீறல்களுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் கேள்விக்குரியானதாகவே உள்ளது.

எனவே மலையகத்தின் எதிர்கால முன்னேற்றம் கருதி இன்றைய நிலையில் அனைத்து தரப்பினரும் சிறுவர்கள் வேலைக்கு அமரத்தப்படுவதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும். அரசு சார்பான அரசு சார்பற்ற சிறுவனங்கள் மலையக சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதை தடுக்க முயல வேண்டும் அவர்கள் தொடர்ந்து கல்வி கூடங்களுக்கு செல்வதற்கு தடையாக உள்ள காரணிகள் பற்றி ஆராய்வது தேவையாக உள்ளது. வறுமைக்குட்பட்ட சிறுவர்களின் குடும்பங்களுக்கு உதவிசெய்வதனூடாக சிறுவர்களை கல்விக்கற்ற சமூகமாக மாற்ற முடியும் மலையகத்தின் தோட்ட தொழிலாளர்களின் பிள்ளைகளின் உயர்கல்விக்கு பெரிதும் தற்போது உதவி புரிந்து வருகின்ற இந்திய அரசாங்கத்தின் ஊடாக வழங்கப்படும். புலமைப்பரிசில்கள் ஆரம்பக்கல்வியை தொடர்வதற்கு கஷ்டப்படும் சிறுவர்களுக்கும் வழங்கினால் பயனுள்ளதாக அமையும்.

பெற்றோர்களே, இளைஞர் யுவதிகளே நாளைய, இளைய சமூதாயத்தை சிறந்த முறையில் உருவாக்க வேண்டிய தார்மீக பொறுப்பு எம்மிடம் உள்ளது. மலையக சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்டுவதை தடுக்க வேண்டும், அதுவே எதிர்கால மலையக சமூக முன்னேற்றத்திற்கு நாம் செய்யும் சிறந்த அர்ப்பணிப்பாக அமையுமென்பதில் எவ்வித ஐயமும்மில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க சேவையில் மலைநாட்டு மக்களின் பங்கு

**பீ. பாக்கியநாதன்**
*உதயம் தொழில் பயிற்சி நிலையம் - நாவலப்பிட்டி.*

குடியேற்ற ஆட்சி காலத்திலும் அதன் பின் சிங்களம் மட்டும் ஆட்சி மொழியாக சட்டம் இயற்றப்பட்ட காலம் வரையிலும் ஆங்கிலத்தில் மட்டும் புலமைத்துவத்வம் பெற்றவர்களின் மாத்திரமே அரசாங்க சேவையில் சேர்க்கப்பட்டார்கள். இதன் காரணமாக வட கிழக்கு மாகாணங்களில் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்றவர்கள் அதிகமாக அரசாங்க சேவையில் இணைந்து கொள்ள வாய்ப்பு எற்பட்டது கிறிஸ்தவ மிஷனரி மார்களின் அனுசரனையுடன் அவ் இரு மாகாணங்களும் ஆங்கிலம் முதல் மொழியாக கல்லூரிகளில் கற்பிக்கப்பட்ட காரணமாக அரசாங்க சேவையில் வடகிழக்கு மாகாணங்களை சேர்த்து தமிழர்கள் இணைந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.

மலையகத்தை பொருத்த வரையில் ஆங்கிலத்தை கற்கும் வாய்ப்பு ஒரு சிலருக்கு கிடைத்தது. தோட்டங்களில் தனவந்தர்கள் ஆகியோரின் பிள்ளைகளே ஆங்கிலத்தை கற்க வாய்ப்பு கிடைத்தது. இவ்வாறு க்ல்வி கற்றவர்கள் தோட்டங்களிலும் கம்பனிகளிலும், வேலை தேடிக் கொண்டார்களே தவிர அரசாங்க சேவையில் சேர்வதற்கு அதிகம் ஆர்வம் காட்டவில்லை. ஒரு சிலரை ஆசிரியர்களாக அரசாங்க சேவையில் சேர்ந்து கொண்டார்கள்.

1959 ஆம் ஆண்டு முதன் முறையாக ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மும்மொழியில் ஏதாவது ஒரு மொழியில் உரிய தகைமை பெற்றிருந்தவர்கள் அரசாங்க சேவையில் சேர்ந்து கொள்ள இடமளிக்கப்பட்டது. 1959 ஆம் ஆண்டும் அதன் பின் இற்றை வரையும் தமிழ் மொழி மூலம் கல்வி கற்றவர்கள் ஆசிரியர் தொழிலை நாடி சென்றார்களே தவிர அரசாங்க சேவையில் காணப்படும் மற்றைய பதவிக்ளுக்கு விண்ணப்பிக்க ஆர்வம் காட்டுவதாக தெரியவில்லை, சிற்றூழியர் பதவிகளை தவிர மற்றைய எல்லா பதவிகளும் அரசாங்க வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்டு, விண்ணப்பங்கள் கோரப்பட்டு அதன் பின் நியமனங்கள் வழங்கப்படுகின்றன. அரசாங்க வர்த்தமானி வாரம் தோறும் பிரசுரிக்கப்படுவதுடன் அவ் வர்த்தமானியில் மலையகத்தை சேர்ந்தோர் பார்ப்பதற்கு அக்கறை காட்டுவதில்லை. அத்துடன் இவ் வர்த்தமானி பெற்று கொடுப்பதற்கு தொழிற் சங்கங்களோ அல்லது பொது அமைப்புக்களே அக்கறை காட்டுவதில்லை.

அரசாங்க வைத்தியசாலைகள், தபாற் கந்தோர்கள். புகையிரத திணைக்களம், அமைச்சுக்கள் ஆகியவற்றில் ஆயிரக்கணக்கான சிற்றூழியர் பதவிகள் இருக்கின்றன. இப்பதவிகளுக்கு குறைந்தது 8ஆம் தரம் போதுமானதாகும். இப்பதவிகளை பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்கள் நூற்றுக்கு நூறு வீதம் பெற்றுக் கொள்கின்ரார்கள் இச் சிற்றூழியர் பதவிகள் ஒரளவு படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கும் பெற்றுக்கொடுக்க மலையக பாராளுமன்ற உறுப்பினர்கள் அக்கறை எடுத்தார்களா? என்று தெரியவில்லை.

அவசாங்க சேவை என்பது ஆசிரியர் தொழில் மாத்திரம் அல்ல விகிதர் தட்டெழுத்தாளர் சிறாப்பர் தொழிநுற்பவியலாளர் மருந்தாளர் போன்ற எவ்வளவோ பதவிகள் உள்ளன. இப்பதவிக்ளுக்கு அவ்வப்போது வர்த்தமானி மூலம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. படித்த கல்வித் தகைமை உள்ள இளைஞர்கள் இப்பதவிக்ளுக்கு விண்ணப்பிக்கலாம் இன விகதாசார அடிப்படையில் அரசாங்க சேவையில் சேர்க்க வேண்டும் என்ற கொள்ளைக்கு அமைய 1996 ஆம் ஆண்டு அன்று ஜனாதிபதியாக கடமையாற்றிய கெளரவ பிரேமதாச அவர்கள் சுற்றிரிக்கை மூலம் எல்லா அமைச்சர்களுக்கும் அறிவித்திருந்தார். இதன்படி மலையக தமிழிருக்கு 6 சதவீதம் பதவிகள் ஒதுக்கப்பட்டிருந்தன இவ்வாறு பதவிகள் பெற வாய்ப்பு இருந்த போதும் எம்மவர்கள் விண்ணப்பிக்காத ஒரே காரணத்தினால் அரசாங்க சேவையில் எமக்கு கிடைக்க வேண்டிய நியமணங்களை இழந்து விடுகின்றார்கள்.

அரசாங்க பதவிகளுக்கு ஆகக்குறைந்த கல்வி தகனமகள் நிர்ணயிக்கபட்டுள்ளன. இதன் பிரகாரம் தமிழ், கணிதம் உட்பட நான்கு பாடங்களில் கா/பொ/த. சாதாரணம் தர திறமை சித்தி எடுப்பது அவசிய மான தொன்றாகும் கணிதத்தில் திறமை சித்தி பெறுவோர் மிகவும் குறைவாக காணப்படுவதால் இவர்கள் அரச வேலைகளுக்கு விண்ணப்பம் அனுப்ப கூட தகுதி அற்றவர்கள் ஆகிறார்கள் கல்வித்துறையை நாம் முன்னேற்றாத வரையில் சிற்றூழியர் பதவிகளை தவிர வேறு பதவிகளை மலையக தமிழர்கள் எதிர்பார்க்க முடியாது ஆகவே மலையக மக்களின் வேலையில்லா திண்டாடத்தை குறைக்கு வேண்டுமாயின் மலையகத்தின் கல்வியை அபிவிருத்தி செய்வது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்லோயா இளைஞர் விளையாட்டுக் கழகம்**
**தனது ஏழாவது ஆண்டை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில்,**
**மலையக இளம் கவிஞர்களிடையே நடாத்திய கவிதைப் போட்டியில்**
**முதலாமிடம் பெற்ற கவிதை.**

# மலையகம் மாண்புறுவது எப்போது....?

வெ. கணேசலிங்கம்
நோர்வூட்

தேயிலையால்
தேசத்தை உயர்த்திய
தியாகிகளை பார்த்து
தேயிலைச் செடி சிரிக்கிறது...

இவர்களின் எழும்பு கூடுகள்
இந்நாட்டின் எல்லைக் கோடுகள்
இருப்பினும் எங்கே நிம்மதி என்று
தேயிலைச் செடி சிரிக்கிறது....

கோடிக் கணக்கில் உழைத்த எமக்கு
கொடுப்பனவுக்கு ஓர் இன்னல்
ஓட்டுரிமை பெற்றுவிட்டோம் ஆனால்
வீட்டுரிமை பெறவில்லையே...

புனர்வாழ்வென்று பண்டாரவளையில்
புடை சூழ்ந்து மக்களை
நடை பிணமென்று இங்கே
இடை போட்டனர்.

பெண்ணியத்தின் இண்ணியத்தை
காப்பதுவே காவலன்கள் - ஆனால்
மருதானையில் காமத்தில் புரண்டு
ஏமனாகிவிட்டான் எம்
பெண்ணியத்துக்கு.....

அவசரகால சட்டத்தில்
அபகரித்து விட்டனர் - உரிமையை
திருத்தி சட்டத்தில் திருடி விட்டனர்
எம் உரிமையை .......

கட்சிப்பற்றால்
மானுட பற்றில்லாத
மந்தைகளாகி விட்ட
மானுடர்கள் இங்கே! எத்தனையோ....

கல்வி கற்கும்
கலை மான்களே! இங்கே
தேசியம் பேசுகின்றனர் - ஆனால்
தேசிய பாடசாலைகள் இல்லையே

வெள்ளைக்காரன் பரப்பிய
வேற்று மதத்தை
பொருளாதாரம் இல்லையென்று
போர்த்திக் கொள்கின்றனர் எம்மவர்...

முல்லோயா கோவிந்தன் முதல்
டெல்டா தலைவர் வரை
உரிமைகள் பேசியோரை
உலகை விட்டே தீர்த்துவிட்டோம்...

வேற்றுருவ தேவதனத்துக்கு
வெளியூர் சென்றவர்கள்
கடன் வாங்கிய பணத்தை
கடலில் போட்டவர் எத்தனை பேர்....

வெள்ளைக்காரன் முதல்
யூன் கொல்லைக்காரன் வரை
இன்றைய இடி அமீன்களுக்கும்
எம்மை இரையாக்குகிறோம்.

ஏ... மலையகமே
மூட நம்பிக்கையில் மூழ்கிவிட்டாய்
கட்சிப்பற்றில் கலந்துவிட்டாய்
விடாமுயற்சியில் தோற்றவிட்டாய்
மலையகமே நீ..மாண்புறுவது
எப்பேரது.?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினை தீர்வில் மலையகம்.?

**நாவலப்பிட்டியூரான்**

யுத்த நிறுத்த பிரகடனத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வில் தீர்வுத் திட்டங்களில் ஒவ்வோர் சமூகமும் இந் நாட்டில் தங்களின் நிலைகளை உத்தரவாதப்படுத்திக் கொள்ள முனைகின்றது.

இந்நிலையில் மலையக சமூகத்தின் நிலை என்னவாக இருக்கும் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. யுத்த நிறுத்த பிரகடனத்திற்கும், சமாதான நடவடிக்கைக்கும் ஆதரவை தெரிவிக்கும் மலையக சமூகம் இந்த நாட்டில் தனது நிலையை உறுதிப்படுத்த எடுக்கும் நடவடிக்கைகள் என்ன?

இந்த நாட்டின் முதுகெழும்பாக விளங்கும் மலையக சமூகத்தின் நிலை அடிமைத்தனமாகத் தான் மீண்டும் உத்தரவாதம் பெறப்போகின்றதா? மலையக சமூகம் குறித்து மலையக தலைமைகள் மென்மேலும் எமது நிலைப்பாட்டை உறுதி செய்துக் கொள்ள முனைப்பாக செயற்படுதல் வேண்டும் என்பது இளைய சமூகத்தின் வேண்டுகோளாக இருக்கின்றது.

சமாதான நடவடிக்கைகளில் இன்னும் எமது சமூகம் நிலைக்குறித்த விடயங்கள் எதுவுமே முன்மொழியப்படாமல் தான் இருக்கின்றது. விடுதலை புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அமைச்சர் சந்திரசேகரனுடனான சந்திப்பின் போது மலையக இளைஞர்களின் அபிலாஷைகள் நிறைவெய்த ஒன்றுபட்டு செயற்படுங்கள் என வழிறுத்தியுள்ளார். அத்தோடு தங்கள் போராட்டதிதல் மலையக இளைஞர்கள் வழங்கிய பங்கிற்கு தான் என்றும் நன்றியுணர்வுடன் இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் வடகிழக்கில் மற்றும் முஸ்லிம்களின் நிலைக்குறித்து பேச்சுவார்த்தையை தொடர்ந்து உத்தரவாதமான கோரிக்கைகள் ஒப்பந்தம் மூலம் சான்றுப்படுத்திக்கொண்டுள்ளார்.

தேசிய ரீதியில் ஓர் தமிழ் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியது மலையக சமூகத்தின் தலையாய கடமையானாலும், தமிழ் தனித்துவத்தை பேனும் அதே சந்தர்ப்பதில் மலையக சமூகத்தின் கௌரவமான தனித்துவத்தை காப்பாற்றிக் கொள்ள வேண்டியதும் எமது பொறுப்பாகும். தமிழ் தேசியம் விருட்சமாயின் அந்த விருட்சத்தின் கிளையாக அமையும் மலையக சமூகமும் பலம் பொருந்தியதாக அமைய வேண்டும். மாறாக அமையுமாயின் தமிழ் தேசிய விருட்சமும் பலவீனமாக அமைந்து விடவாய்ப்புண்டு.

எனவே நிகரான ஒரு நிலையில் மலையக தமிழ் சமூகம் உருவாக வேற்றுமைகளுக்கப்பால் மலையக தலைமைகள் ஒன்றிணைந்து செயற்படல் வேண்டும். மலையக தலைமைகள் வேற்றுமையால் வேரூண்டிக் கொண்டிருப்பதை தொடர்ந்து கையாலுமானால் எதிர்வரும் இளைய சமூகம் ஒன்றிணைந்து செயற்படுவதும் என்பது கேள்விக்குறியே?

சமூகத்தை வழிநடத்தும் தலைமைகள் இளைய சமூகத்தின் வழிகாட்டலாக அமைய வேண்டும். என்பதை மறந்து செயற்படும் நிலையினை மாற்றி மாற்று நடவடிக்கையில் செயற்படுவது காலத்தின் தேவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையில் சமுகத்தின் சகல தரப்பினரும் ஒன்றிணைந்தே எமது சமுகத்தின் கட்டமைப்பை விருந்தி செய்து நிகரான நிலைக்கு நகர முடியும். குறிப்பாக ஆரசியல் தலைமைத்துவங்கள் தான் இவர்களை ஒன்றினைக்க வேண்டும். ஆனால் இந்த தலைமைத்துவங்கள் இனைஞர்களை ஓரங்கட்டும் நிலையில் காணப்படுகிறது. வேதனைக்குறிய விடயமாகும். ஏனெனில் எந்தவொரு அமைப்பும் இளைஞர் தலைமைத்துவத்தையும், அவர்களுக்கான ஒன்றினைக்கப்பட்ட திட்டங்கள் எதனையும் இதுவரை நடைமுறைப்படுத்யத்தில்லையே, முடிந்தளவு இளைஞர்களை பயன்படுத்திக் கொள்வதில் தான் கவனம் செலுத்துகினறன.

மலையகத்தில் காணப்படும் அரசியல் கட்சிகள், தொழிற் சங்க அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றில் தீர்மானம் எடுக்க கூடிய நிலையில் இளைஞர்களுக்கு இடம் வழங்கப்பட்டுள்ளதா?

மலையக சமுகத்தின் திடகாத்திர நிலையை உறுதி செய்து கொள்ள இளைஞர் சமூகமும் இன்றியமையாத சக்தி. இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான விடயத்தில் எத்தனை இளைஞர்களின் ஆலோசனைகள பெறப்ட்டன இந்நிலை மாற்றம் காண வேண்டும்.

இளைஞர் சக்திகள் புறக்கணிக்கப்பட பல காரணிகள் காரணமாக அமைகின்றது. குறிப்பாக இது வரையில் ஒன்றினைக்கப்பட்ட நிலையில் மலையக இளைஞர் சமுகம் இல்லாத நிலையே பெரிதும் காரணமாக அமைகின்றது. எனவே ஒன்றிணைந்த சுயாதீன இளைஞர் கூட்டம் மிக அவசியமாக உணரப்படுவது குறித்து ஒவ்வோர் இளைய தலைமுறையினரும் யோசிக்க வேண்டும். யோசிப்பது மட்டுமல்ல செயல் வடிவம் கொடுக்க முனைப்பாக செயலில் இரங்கவேண்டும்.

எனவே சகல தரப்பும் ஒண்றிணைந்த நிலையில் இளைஞர் சமுகத்தின் கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து இனப்பிரச்சினை தீர்வில் எமது சமுகத்தின் நிலையையும் உறுதிசெய்து கொள்ள ஆயத்தமாக வேண்டும்.

## ஹைக்கூ.... கவிதைகள்

தேசம் உன்
விரல் நுனியில்,
மலையக பெண்ணே!

அரும்புகள் தான் - உன்
உதிரத்தை உறிஞ்சியது,
கொழுந்து பறித்த போது!

தேசத்தை பாதுகாக்க - உன்
யுத்த புறப்பாடுகள்,
படங்குத்துண்டுடன்!

உன் சிரசில் பள்ளத்தை
உருவாக்கியது,
கொழுந்து கூடை!

உயரங்களை
நோக்கிய கொழுந்து சேமிப்பு,
நாட்டின் உயர்விற்காய்!

பள்ளத்தை நோக்கிய - உன்
கொழுந்து சேமிப்பில்,
வாழ்க்கை பறிக்கப்படுகிறது!

உன் உழைப்பில்
கொள்ளை ஆரம்பம்,
கங்காணியின் நிறுவலில்!

உன்னில் கரிசனை
தலைமைகளுக்கு,
சம்பள உயர்வு போராட்டம்!

எம். திருலோகசந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக இளைய சமூகமும் எதிர்காலமும்

**அமுதன்**

மலையகம் எனும் போது இலங்கையில் வெள்ளையர்களின் ஆட்சியின் போது 1824ம் ஆண்டின் ஆரம்ப காலகட்டத்திலிருந்து தென்னிந்தியாவிலிருந்து பெருந்தோட்டத்துறைக்கு வேலைக்கு அமரத்திய ஒரு கூலிப்படையே இதற்குட்பட்டவர்கள் என்று கூறப்பட்டு வருகின்றது. சுமார் 177 ஆண்டுகள் கடந்த நிலையிலும் அவர்களினுடைய பரம்பரையினரே இன்றும் பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்களாகவும் கல்விமான்களாகவும் வர்த்தகர்களாகவும் இலக்கியகர்த்தாக்களாகவும் இம்மக்களை பிரதிநிதித்துவபடுத்தும் அரசியல் பிரதிநிதிகளாகவும் தங்களை பரிணமித்துக் கொண்டு வருகிறார்கள்.

இந்த 177 ஆண்டுகள் கடந்த நிலையிலும் இம்மக்கள் கூட்டத்தினுடைய ஒவ்வொரு நகர்வுகளும் இம்மக்கள் கூட்டம் தொடர்பாக வெளிவரும் நிகழ்வுகளும் மலையகத்தின் எதிர்கால முன்னேற்றம் குறித்தும் ஏனைய சமூகத்தினரின் இம்மக்கள் குறித்த பார்வையும் அவ்வப்போது கிளம்பும் விமர்சனங்களும் ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் சில மறுக்கப்படகூடியதாகவும் உள்ளது.

இந்த நிலையில் இம்மலையக சமூகம் இன்று பல்வேறு துறைகளில் விருத்தியடைந்துள்ள நிலையிலும் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிட்டு நோக்கும் போது மிகவும் பின்னடைவான நிலையிலேயே காணப்படுகின்றது. இச்சமூகத்தின் பொருளாதார வீழ்ச்சியானது கல்வி,கலை, கலாசாரம்,விளையாட்டு வேலைவாய்ப்பு உட்பட சகல துறைகளிலுமே பாதிப்பினை ஏற்படுத்தி பிறள்வு நடத்தைகளுக்கு வழிவகுக்கின்றது.

இப் பாதிப்புகளை நிவர்த்தி செய்து மாற்றுத் திட்டங்களுடன் புதிய சிந்தனையை முன்னெடுக்க வேண்டியது இளைய சமூகத்தின் பொறுப்பாகும். இப் பொறுப்பு குறித்த சிந்தனைகளை எவ்வாறு அனுகுகிறார்கள் மலையக இளைய சமூகத்தினர் என்பதை மலையகத்தின் பல்வேறு பிரதேசதிதல் வாழும் இளைஞர் யுவதிகளிடம். மலையகத்தின் எதிர்கால முன்னேற்றம் குறித்து இளைய சமூக செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என வினவியபோதுசு?

**R.. S. சாந்தகுமாரி**
**யட்டியந்தோட்ட**

சகலதுறைகளிலும் ஈடுபாடுகொள்ள அக்கறையுள்ளவர்களாக இருக்க வேண்டும் முதலாவதாக கல்வியின்பால் அக்கறை செலுத்தி கல்வியறிவினை பெற்றுக்கொள்ள வேண்டும் சுயநலமின்றி பொது நலமாக கடமையுனர்வுடன் செயல்பட வேண்டும் மலையகத்தின் அமைப்புக்கள் ஒன்றிணைந்து செயல்படத்தூண்டுவதன் மூலம் மலையகத்தின் உன்னத வளர்ச்சிக்கு வழிகோல முடியும். புரழ்வான நடவடிக்கைகளை தவிர்திதுக்கொள்ளல் சமூக பொருளாதார கலாசார விடயங்களில் அக்கறை கொண்டு செயற்பாடுகளை ஒன்றினைந்து முன்னெடுக்க வேண்டும். தொழில் வாண்மைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**சி. பசுபதி**
**எலகொல்ல தோட்டம்**
**ரங்கல**

மலையகத்தில் கால்பதித்த அந்த நாள் முதல் இன்றுவரை தனக்கென ஒரு சுயசிந்தனை கூட இல்லாத நிலையில் முடங்கியிருக்கிறார்கள் இந்நிலை மாறி நிகரான நிலைபெற மலையக தலைமைகள் தங்கள் உணர்வுகளை சமூகத்தின்பால் செலுத்த வேண்டும். அத்துடன் மலையகத்தில் சிந்தனை வளர்ச்சி அவசியம் இதற்கு மலையக இளைய சமூகத்தின் பங்கு மட்டுமே உந்து சக்தியாக அமைய முடியும். எனவே அனைத்து இளைய சமூகமும் ஒன்று பட்டு உயரிய சிந்தனைகளை நடைமுறைபடுத்த வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை ஒரு புரட்சிகரமான நகர்வுகளாக அமைய வேண்டும் லெனின் குறிப்பிடும் போது கூட புரட்சிகரமான ஒரு தத்துவமின்றி புரட்சிகரமான ஒரு இயக்கம் இருக்க முடியாது என்கிறார் மக்களின் சிந்தனையில் திருப்பங்களை ஏற்படுத்த கூடியதாக செயற்பாடுங்கள் இளைஞர்கள் ஒன்றிணைந்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

விஜயகுமார்
ராகலை

மலையக இளைய சமூகத்தினத சிந்தனையானது குறுகிய மட்டத்தில் இல்லாது விசாலமாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். வடகிழக்கு த்மிழர்களுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்திருப்பது அவர்களது ஒன்றிணைந்த போராட்டமே. இன்று சமாதான பேச்சுவார்த்தைகள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. சில வேலைகளில் தோழ்வியடையுமானால் மலையக இளைஞர்கள் மிகவும் பாதிக்கப்படலாம். இந்நிலையில் அவர்களுக்கு உத்தரவாதம் யார்? இது வேறு பிரச்சினையாக இருந்தாலும் சமூக முன்னேற்றம் குறித்து ஆக்கபூர்வமாக ஒரு திட்டமிட்டு ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

C. குணசேகரன்
மாத்தளை

கல்வி, பொருளாதாரம்,வாழ்க்கைத்தரம்,சமூகம் அரசியல் போன்ற துறைகளில் இளைஞர்களின் உட்பிரவேசம் அவசியம் கல்வி நவீன உலகத்திற்கு ஏற்றவகையில் கணணிகல்வி என்பவற்றை விருத்தி செய்து கொள்ள வேண்டும் தொழில் வாய்ப்புகளை தொழில் வாய்ப்புகளை விருத்தி செய்து கொள்ளல் அரசியல் விழிப்புணர்வை சமூகத்திற்கு ஏற்படுத்த வேண்டும் சிறுவர்களின்பால் இளைஞர் அமைப்புக்களது கவனம் சென்று சிறுவர்கள் கல்வி கற்க தூன்ட வேண்டும். ஒன்றிணைந்து செயலொழுங்கில் பொருத்தமான திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

துசாந்தனி
அலிஎல்லாவளை

கல்வியில் திடமான அத்திவாரத்தை இட்டு இளைய சமூகத்திலிருந்து சிறந்த தலைமைத்துவம் உருவாக வேண்டும். அரசியல் உரிமைகளை பெற்றுக்கொள்ளல் அழுத்தம் கொடுக்கவும். பேதங்கள் மறந்து மலையகம் என்ற ரீதியில் இளைய சமூகம் ஒன்றிணைந்து பண்பாட்டு, கலாசார அம்சங்களை வளர்ப்பதிலும் பிரயோசனமுள்ள பொழுதுபோக்கு அம்சங்களை ஏற்படுத்தலுடன் கலை ·இலக்கிய, விளையாட்டு துறைகளில் முனைப்பாக ஈடுபடல் வேண்டும்.

செந்தில் குமார்
மாத்தளை

மலையகத்தின் தனித்துவ கௌரவத்தை காக்க வேண்டிய பொறுப்பு இளைய சமூகத்திடம் தான் உள்ளது. இளைஞர்கள் சுயாதீனமாக ஒன்றிணைந்து ஆக்கபூர்வமாக சிந்தனையில் அடுத்த கட்டத்திற்கு நகரவேண்டும்.

இவர்களுடைய கருத்தினை தொகுத்து நோக்குகின்ற போது நவீன தொழிநுட்பம், பொருளாதாரம் வாழ்க்கைத்தர மேம்பாடு சமூக அக்கறையில் விருத்தி, சிந்தனை வளர்ச்சி என்பன முன்வைக்கப்பட்டாலும் அடிப்படையில் இவையனைத்தையும் பெறுவதற்கு தூண்டுகோளாக கல்வியே அவர்களை சென்றடைய வேண்டியுள்ளது. மலையக இளைஞர்கள் தம் பிரதேசத்தின் வளர்ச்சிக்கு மட்டும் முயற்சிக்காமல் அவர்களுடைய நடவடிக்கை மலையகம் முழுவதும் ஒரு வலைபின்னலினூடாக முன்னகர்த்தப்பட வேண்டும் எதிர்கால முன்னேற்றம் குறித்து இளைஞர்கள்களின் பங்களிப்பு என்ற உடன் அது எமது தலைமைத்துவங்களுக்கு எதிரான அரசியல் நடவடிக்கையாகவே கருதிக்கொண்டிருக்கின்றனர் இது தவறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இன்றைய இளைஞர் கூட்டம் ஒரு அழுக்கக்குழுக்களாக இருந்து அரசியல் மற்றும் இதரதுறைகளில் இருந்து குரல் கொடுக்க வேண்டியதும், அவ்வப்போது எமது சமூக விருத்திக்கு என்ன செய்ய வேண்டும் என்று சிந்தித்து ஆலோசனை வழங்கக் கூடியவர்களாகவும் வளர வேண்டும். கல்வியின் முக்கியத்துவத்தை சாதாரண சிறுவர்கள் மத்தியிலிருந்து மிளிரச் செய்து அதனூடாக கலை, கலாச்சார நடவடிக்கைகளுக்கும் வித்திட வேண்டும். சமூகத்தை உயர்வடைய விடாமல் திட்டமிட்டு எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் நடைமுறைப்பிரச்சினைகளையும் எடுத்துக்கூறக்கூடியவர்களாகவும் தர்கிக்க கூடியவர்களாகவும் உருவாகும் போது உயர்மட்டங்களில் உள்ளவர்களுக்கு அழுத்தமும் செயற்பாடுகளை துரித கதியில் முன்னெடுக்க வேண்டிய தேவையும் உருவாகும். இலக்கிய படைப்புக்களினூடாக யதார்த்தங்களை உணர்த்தக்கூடியவர்களாகவும் இளைஞர்கள் இருக்கவேண்டியுள்ளது சமூகத்தின் பால் அக்கறை கொண்டுள்ள அரசுசாரா நிறுவனங்களிடம் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களின் உதவியுடன் சமூகத்தின் உயர்வுக்கு பங்களிப்பு அவசியம்.

இன்று இவையனைத்தையும் திறம்பட செய்யக்கூடியவர்களாக யார் இருக்கின்றார்கள் என்று சிந்திக்கும்போது அனைவரின் கவனமும் மலையக ஆசிரியர்களிடமே கூடுலாக திரும்புகின்றது. எனினும் அவர்கள் இன்று இதனை ஒரு தொழிலாகவே கருதி செயல்படுகின்றார்களே தவிர அதனை ஒரு வான்மையாக கருதி சமூகத்தின் மேம்பாட்டுக்கு பாடுபடுபவர்களாக காணமுடியாத நிலையே உள்ளது.

எனவே இந்நிலை மாற வேண்டும் இளைய சந்ததியினரின் செயற்பாடுகள் சக்திமிக்கதாகவும்,புரட்சிகரமானதாகவும் அமைய வேண்டும். மலையக சமூகத்தின் முன்னேற்றம் குறித்து சிந்திக்கின்றபோது இம்மக்கள் கூட்டத்தின் விடிவுக்கு அரசியல் வாதிகள் தொடக்கம் சகல தரப்பினருக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டிய ஒரு இளைஞர் சக்தியாக வளர்ந்து வரவேண்டியதே காலத்தின் தேவையாகவுள்ளது. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் இன்று மலையகத்தின் கல்வித்துறையையும் பாதித்து உள்ளது எமது உரிமைகள் எவ்வாறு பெற்றுக்கொள்ள வேண்டும். மறுக்கப்படும் உரிமைகளை வென்றெடுக்க என்ன செய்ய வேண்டும் என்று இளைஞர்கள் சிந்திக்க வேண்டும். மக்களினுடைய உரிமைகள் மறுக்கப்படும் போது அதன் விளைவு போராட்டமாகும். மலையக மக்களின் உரிமைகளும் மறுக்கப்பட்டுள்ளது. இதனாலே இவ்வளவுகாலமும் எமது உரிமைகளை போராட்டம் மூலம் பெற்றுக்கொண்டிருக்கின்றோம் என்பதே உண்மை

எனவே நாளைய சமூகம் அடிப்படையில் வாசிப்புத்திறன், பேச்சுத்திறன், எழுத்துத்திறன்,என்பவற்றோடிணைந்த அடிப்படை கல்வி வளர்ச்சியினை விருத்தி செய்ய வேண்டும். மலையகத்தின் உள்ள இளைஞர் மன்றங்கள் கழகங்கள் என்பவற்றோடு தொடர்புகளை ஏற்படுத்தி அதனை ஒருமித்த இளைஞர் கூட்டமாக திரட்டி ஒரு வலைபின்னல் அமைப்பில் செயற்பட வேண்டிய பொறுப்பு இளைஞர்களிடம் உள்ளது. இவ்வாறான சிந்தனையே நாளைய மலையகத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். மனிதன் பிறந்தான், வாழ்ந்தான், மடிந்தான் என்பதை விட தனது சமூகத்திற்கு என்ன செய்தான் என்பதனையே வரலாறுகள் கூறும். எனவே வரலாறுகள் கூற வேண்டிய சாதனைகளை மலையக எதிர்கால முன்னேற்றம் குறித்து இளைஞர்கள் படைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்லோயா இளைஞர் விளையாட்டுக் கழகம்**
**தனது ஏழாவது ஆண்டை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில்,**
**மலையக இளம் கவிஞர்களிடையே நடாத்திய கவிதைப் போட்டியில்**
**இரண்டாமிடம் பெற்ற கவிதை.**

# விடிவை நோக்கி விரைவோம்


S. மனோகரன்
ஸ்ரீ பாத தேசிய கல்வியியற் கல்லூரி


மனித நேயம்
மருந்துக்கும் இல்லாத
மானுடம் தன்னில்.

இதயமதை இரணப்படுத்தும்
இனவாதம்
இல்லாமல் போகட்டும்.

மனிதத்தை மறிக்கும்
மதவாதம்
மறைந்தே போகட்டும்.

அடக்கு முறைகள்
அழியட்டும் - அதனோடு
அடிமை விலங்கும்
அவிழட்டும்.

ஜாதிக் கொடுமைகள்
குறையட்டும்.
மடமை கறைகளும்
மறையட்டும்.

பாட்டாளி கூட்டமெல்லாம்
பசி மறந்து
பஞ்சமின்றி வாழட்டும்.

வர்க்க உயர்வின்
வளர்ச்சியினால்
எதிர் கொண்ட இன்னல்களும்
ஏற்பட்ட ஏமாற்றங்களும்
போதும்.

சாதிக் கொடுமைக்கு
சற்றும் களைக்காத -
பெண்ணடிமை சரித்திரம்
படைத்தது போதும்.
கதியாய் எம்மினம்
அங்கும் இங்கும்
அவஸ்தையுற்றதும் போதும்

ஆயிரமாயிரம் ஆண்டுகளாய்
அடங்கி அடிமைகளாய்
அல்லல் பட்டது போதும்.

வீழ்ந்ததும் போதும்
வீழித்துக் கொள்வோம்
விடியல் நம் வரவில்
விருப்பம் கொண்டுள்ளது.

உன்னத உண்மைகளுக்கும்
பரிசுத்தமாய் பரினமிக்கும்
பாச பிணைப்புகளுக்கும்
அன்பாய் உடன்படுவோம்.

வாய் வார்த்தைகள்
வசீகரமானவையாக
இருக்கட்டும்
வசந்தம் - நம்
வாசல் வரும்
வாழ்வு வளம் பெறும்.

உணர்வுகளுக்கும்
உந்துதலுக்கும்
உயிர்கள் உடன் படுவது
உண்மை தான்.

விளைவுகளை
விளங்கிக் கொண்டால்
விழித்துக் கொள்வது தானே
விடிவின் முதற்படி.

அபிலாஷைகள்
அடையப்படும் வரை
இலக்கை நோக்கி
இடைவிடாது போராடுவோம்.

சோதனைகள் கூட
சாதனைகளாக....
சரித்திரம் படைக்கட்டடும்.

எதிர்படும் இன்னல்களை
எதிர்த்துப் போராடுவோம்
சிகரத்தை தொடுவது
ஒன்றும்
சிரமமானதன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

"சாப்பிட்டுட்டு போய் வேலய பாருங்கப்பா"
சுப்பையா கிழவனின் சத்தம் உயர்ந்து தாழ்ந்தது.பொடியன்கள் செய்கின்ற வேலை அவருக்கு புதிய நம்பிக்கையொன்றை ஏற்படுத்தியிருந்தது.
" இந்த முறை ஒரே நேரத்துல தூக்கனும்.. விட்டு விட்டு தூக்காதீங்க, ரெண்டு கையையும் சேர்த்துப் புடிங்க ஒன்னு...ரெண்டு...மூனு..புடி..புடி..கீழே சரியா குழிக்கு தள்ளுங்கப்பா. ஆங்.. ஆங்.. சரி..சரி..அப்பா.."
கொடி கம்பம் நட்டாகி விட்டது. ஐந்து தடவை மனந்தளராத முயற்சி கீழே இருந்து பார்க்கிறபோது வானத்தைத் தொட்டு விட்டது போல ஒரு கம்பீரம்.இயற்கை தனது வாழ்த்தாக மெல்லிய காற்றை வீசியது "ச்ஆ..சுப்பரா இருக்கு"எல்லோரது வாயிலிருந்தும் மகிழ்ச்சியை கொட்டியது.

# செந்தீ




S. ராஜேந்திரன்

புதிய மரம் தோல் சீவப்பட்டதால் சூரிய ஒளி பட்டு மின்னியது. பல வாதுகள் அதன் உறுதியை காட்டியது. எப்படித்தான் பல முறை சீவினாலும் வாது இருக்கிற இடம் தனியாகவே தெரியும். அடிபெருத்து முழு மரத்தையும் தாங்குவதாய்,ஒரு இளைய தலைமுறையின் வெற்றிப் படைப்பாய் "கல்ல போட்டு நல்லா இறுக்குங்க " தங்..தங்.. என்ற சத்தத்தையும் மீறி சுப்பிரமணியத்தின் குரல் ஒலித்தது. மூன்று அலவாங்குகளின் குத்துகள் அடுத்தடுத்து விழுந்தது. மகேந்திரனின் "காப்புக்காய்ச்சிய" கரங்களின் உறுதி. கருங்கற்களையும் உடைத்து மண்ணில் பதிப்பதாய்.

தொங்க காம்பிரா பக்கமாய் வந்த சுப்பையா கிழவனுக்கு இருபது வயதாய் போனது. கண்களிலே ஒரு புதிய ஒளி அவரையறியாமலே வலது கை உயர்ந்தது. நேராக நின்று,பசக்கென்று கையை உயர்த்தி, நெற்றிக்கு மேலாக கைமுஸ்டியை இறுக்கி ஒரு "சலூட்" நரம்புகள் புடைத்தன. "வாழ்க" வேலை செய்து கொண்டிருந்த அனைவரது பார்வையும் ஒருதரம் அவரின் பக்கம் திரும்பியது.
பந்தடி களத்தை துப்பரவாக்கிக் கொண்டிருந்த "சாமிமலைத் தோழர்கள்" ஐந்து பேர் சுப்பையா கிழவனின் முன் நின்று ஒரே நேரத்தில் கையை உயர்ந்த அதே வேகத்தில் மீண்டும் கீழே இறங்கியது.

"தாத்தா போய் குளிச்சிட்டு ஓடியாருங்க இன்னும் ரெண்டு மணித்தியாளம் தான் இருக்கு" சுப்பிரமணி கூறிவிட்டு நேராக மேடை நோக்கி நடந்தான்.
சுப்பையா கிழவனின் பார்வை உயர்ந்து கம்பீரமாய் பறக்கும் அந்த செங்கொடியின் மீதே லயித்திருந்தது. அதன் ஒவ்வொரு அசைவும் சுப்பையா எழு...சுப்பையா...எழு என்பது போலிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாக நாற்பத்து மூன்று வருடங்களுக்கு முன்பு,இதே இடத்தில் ஒரு செங்கொடியை ஏற்றி வைத்து"தோழர்களே நம்ம இன்று ஒன்னு கூடியிருக்கிறது, நம்ம தோட்டக்காட்டுல ஒரு மாற்றத்த எற்படுத்திறதுக்குதான் இங்கு பறக்கிற செங்கொடி நம்மவுட்டு ரெத்தம். நம்ம உசிரு..."என்று உணர்ச்சி பொங்க பேசியது ஞாபகம் வந்தது. அன்று சகல ' தோழர்களுமே' கிழவனின் முதுகில தட்டி "நல்லா பேசுன சுப்பையா" என்றதும் "பேச்சி மட்டுமில்ல தோழரே செயலு முக்கிய முனு" மடக்கிப் பேசியதும் எண்ண அலைகளில் ஒரு முறை முட்டிச் சென்றது.
தோட்டப் பகுதியில் இடது சாரி தொழிற்சங்கத்தை கட்டி வளர்ப்பதற்கு தன் இளமையாற்றலை முழுமையாகப் பயன்படுத்தியது. பல தடவை பொலிசுக்கு போனது எல்லாம் இப்போது பறக்கும் இந்த செங்கொடியின் அசைவு மீட்டித்தந்தது.
செங்கொடியில் லயித்திருந்த பார்வையை மெதுவாக திருப்பி நீண்ட பெருமூச்சுடன் மூன்று எட்டு வைத்ததும், வலது புறமாக இருந்த மாட்டுப்பட்டியின் சுவரில் தேர்தலுக்காக ஒட்டிய போஸ்டர் ஒன்று கண்களில் பட்டது. பலமுறை அந்த போஸ்டரைப் பார்த்திருந்தாலும் இன்று புதிதாகப் பார்ப்பது போலிருந்தது. கர்.ர்.ர் என்று காறி ஒரு துப்பு, போஸ்டரில் இருந்த "தலைவனின்" முகத்தில் எச்சில் சரியாகப் பட்டு வழிந்தது. தடித்த உதட்டில் சிறிது நேரம் எட்டியிருந்த புகையிலைத் துண்டு, மெதுவாக கழன்று சத்தமின்றி கீழே விழுந்தது. நல்ல வேலையாக கிழவனின் மகன் ஆறுமுகம் கங்காணி இதைப் பார்க்கவில்லை. இல்லையெனில் ஒரு ரகளையே நடந்து முடிந்திருக்கும்.

அந்த லயத்தில் பக்கத்துக்குப் பதினாறு வீதம் முப்பத்திரென்று காம்பிராக்கள். பந்தடி களத்துக்குப் பக்கமுள்ள பகுதியில் கடைசி காம்பிராவே சுப்பையா பிறந்து வாழ்ந்த இடம் ட்ரம் வாளியில் தண்ணீர் சுடவது சொய்... என்ற சத்தத்தால் உறுதி செய்யப்பட்டது. "வெது வெதுன்னு இருந்தா போதும்பா" சொல்லியபடியே வாசலைத் தாண்டி, மெதுவாக காலை முன் வைத்து முன் வராந்தாவிலிருந்த நாற்காலியில் 'அம்மா' என்று உட்கார்ந்த போது, நேராக முன்னே மாட்டியிருந்த 'புதிய படம்' கிழவனை ஒரு தூக்குத் தூக்கிப் போட்டது. "ஸ்டாலின்" வாய் முணு முணுக்க ஒரு முறை எழுந்து, மீண்டும் அமர்ந்த போது உஸ்...ஸ் என்ற பெருமூச்சு.

இதே இடத்தில் மாட்டியிருந்த லெனின். ஸ்டாலின் படங்களை கழற்றி அட்டலில் எறிந்தது மட்டுமல்லாமல் யாரோ 'தலைவரு குடுத்தான்னு' சாராயத்தையும் குடித்து விட்டுவந்து, வேறு ஒரு ஏமாற்றுக்காரனின் படத்தை அந்த இடத்தில் ஒட்டி கிழவனின் வைத்தெரிச்சலை கொட்டிக் கொண்ட அவனது மகன் ஆறுமுகம் இந்தளவுக்கு இறங்கி வந்திருப்பானென்று நம்ப முடியவில்லை. போர்க்குணமிக்க ஒரு தொழிலாளியை உருவாக்கிக் காட்டுவேன் என்று சபதம் பூண்டு, பிறந்தது முதல் அவனை "கைக்குள்ளேயே" வளர்த்து இறுதியில் தோற்றுப் போன வேதனையை பேரன் நீக்குவான் என்று சுப்பையா என்றுமே நம்பியதில்லை. "கொட்டகலைக்கு போயிட்டு வாரம்பா அங்க என்னுட்டு கூட்டாளி ஒருத்தன்" இருக்கிறான் என்று சொல்லி அடிக்கடி அங்கு போகச் தொடங்கிய ஆறுமுகம் படிப்பாலும் தோல்வியடைந்து போனது வரலாறாகிப் போனது. இறுதியில் மக்களை ஏமாற்றிய "அந்த" தொழிற்சங்கத்தின் தலைவராகவே மாறி போனபோது, சுப்பையா கிழவனால் ஒதுங்கியிருக்க முடிந்ததே தவிர வேறு ஒன்றும் செய்ய முடியவில்லை.
"தாத்தா தண்ணி சுட்டுரிச்சு வாங்க குளிப்போம்" என்று சுப்பிரமணி காலை பீலியில் பிடித்தவாறே கூப்பிட்டதோடு அந்த வரலாற்று பின்னோட்டம் தடைப்பட்டு போனது. மூன்று பேர் தண்ணியூற்றி முதுகு தேய்த்து...

"அப்பா நல்லா குளிப்பா" என்று சுப்பையா கிழவனின் திருப்தி இளைஞர்களுக்கும் மன நிறைவானது.
சரியாக மாலை நாலுமணி உய்... ய்... ய் ஸ்டோர் சங்கு ஊதுவதற்கும் நிகழ்வு ஆரம்பமாவதற்கும் சரியாக இருந்தது.

"தோழர்களே இப்போது தோழர் சுப்பையா அவர்களுக்கு செங்கொடி அன்பளிப்புச் செய்யப்படும் தனது வாழ் நாள் முழுவதையுமே பாட்டாளி மக்களின் மேம்பாட்டிற்காக அர்பணித்து,வாழ்வை அர்த்தமாக்கிக் கொண்ட அவரின் கிரங்களால் இளைஞர்களுக்கான இயக்க அடையாள அட்டை வழங்கப்படும்",



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்று அறிவிக்கப்பட்டது.


கரகோசம் வானை முட்டி மீண்டும் கீழிறங்கிய போது ஒரு இராணுவ கமாண்டருக்குறிய உறுதி, சுப்பையா கிழவனில் காணப்பட்டது. மார்பில் லெனின், மாகஸ், ஸ்டாலினின் உருவங்களுடனான பதக்கங்கள். அரைக்கை வைத்த சிவப்பு சட்டை கை மடிபிலிருந்து மேலே தோல்வரை செல்லும் பட்டி அவர் நிமிர்ந்து நிற்கும் கம்பீரம், ஒரு பழைய கருப்பந்தேயிலை மரத்தை விட உறுதியாக இருந்தது.
பந்தடி களம் முழுவதும் செந்தோழர்களால் நிறைந்து கிடந்தது. அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு ஆரம்பமானது நேர்த்தியாக இருந்ததற்காகவும், ஒரு கம்யூனிஸ்டாக ஏற்றுக்கொள்ளப்பட்டதை உறுதி செய்தமைக்காகவும், இளைஞர்கள் மனதில் ஒரு புரட்சிப்புயல் சுழன்று அடித்தது.

"எங்க ஒன்னுட்டு காட காட்டு" "ச்சா சுப்பரா இருக்கு" "இது சர்வதேசத்துக்குமுறிய ஐடின்காடு தோழரே" இளைஞர்களது சம்பாசணை தோழர் சுப்பையா பேசுவார் என்றதும் எங்கும் நிசப்தம். அவர் நாற்காலியிலிருந்து எழுந்து முன்னே மைக்கருகே வந்து.

"தோழர்களே ஒலகம் இருக்கு மட்டும் இருக்கப் போவுற தத்துவத்த ஏத்துக்கிட்ட ஓங்களுக்கு ஏம்புட்டு புரட்சிகர வாழ்த்துக்கள்" என்று கையை உயர்த்தியதும் கரகோசம் விண்ணைப் பிளந்தது.

பந்தடி களத்துக்குப் பின்னே இருந்த காமன் பொட்டல், துணி காயவைக்கும் கல்லுப்பாறையெல்லாம் தோட்ட மக்கள் நிறைந்திருந்ததை கண்டு , இளைஞர்கள் மட்டுமல்ல உயரே பறந்த அச் செங்கொடியும் தலையை உயர்த்தி கம்பீரமாய் பறந்தது.

## இளைஞர்களுக்கு சுவாமி விவேகானந்தர் .....!



- நம்பிக்கை, நம்பிக்கை, நம்பிக்கை, நம்மிடத்தில் நம்பிக்கை, கடவுளிடத்தில் நம்பிக்கை இதுவே மகிமை பெறுவதன் ரகசியமாகும்.
- நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய் பலவீனன் என்று நினைத்தால். பலவீனாகவும், வலிமை படைத்தவனாக நினைத்தால் வலிமையுள்ளவனாகவும் ஆகிவிடுவாய்.
- வெற்றி பெறுவதற்கு நிறைந்த விடாமுயற்சியையும், பெரும் மனவுறுதியையும் நீங்கள் கொண்டிருக்க வேண்டும்.
- பலவீனதத்திற்கு பரிகாரம் ஓயாது பலவீனத்தைக் குறித்து சிந்திப்பதல்ல.
- மக்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டுமே உனது சொந்த உறுதியான முடிவில் பிடிப்புடன் இரு.
- உனது எதிர்காலத்தை நீயே உருவாக்கு.
- ஒரு கொள்கையை எடுத்துக்கொள் அதற்காகவே உன்னை அர்பனித்து போராடிக்கொண்டிரு. உனக்காதரவான காலம் வரும்.
- ஒரு நல்ல இலட்சியத்துடன் முறையான வழியை கைக்கொண்டு தைரியத்துடன் வீரனாக விளங்கு
- இல்லையென்று ஒருபோதும் சொல்லாதே. என்னால் இயலாது என்று ஒரு போதும் சொல்லாதே. ஏனெனில் நீ வரம்பில்லா வலிமை பெற்றவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**J. சிவராம்**
**ராகலை**

# 1

கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக அடிமை வாழ்கை வாழ்ந்து கழித்த எமது மலையக சமூகம் இன்றும் அந்த அடிசுவட்டிலேயே தனது வாழ்கை சக்கரத்தை ஒட்டிக்கொண்டிருக்கிறது. அந்த வகையில் மலையகத்தை பிரதிநிதிப்படுத்தக்கூடிய தலைமைகள் சில அரசியலில் குதித்தது அதில் வெற்றியும் கண்டது. இருப்பினும் பெரும்பான்மை அரசியல் சக்திகளின் அதிகாரங்களுக்கு உட்பட்டே மலையக தலைமைகளின் செயற்பாடுகள் அமைந்தன. இன்றும் அவ்வாறே. கல்வி மட்டத்தில் வெறுமனே அனுபவக்கல்வியை மட்டும் கொண்டிருந்த மலையக மக்கள், தலைமைத்துவம் இடுகின்ற கட்டளைக்கு செவிசாய்த்து அதனையே தங்களது தாரக மந்திரமாகக் கொண்டு தங்களது தொழிலையும் இதர செயற்பாடுகளையும் மேற்கொண்டனர் இவ்வாறான சந்தர்ப்பத்தில் காலத்தின் தேவைகருதி சில படித்த இளைஞர்கள் உருவாகி மக்களிடையே விழிப்பை ஏற்படுத்தியதும் மட்டுமல்லாமல். ஏனைய கட்சிகளை அமைத்து வெவ்வேறான பாதையில் தங்களின் நடவடிக்கைகளை மேற்கொள்ள தலைப்பட்டனர். எனவே இன்று மலையக மக்கள் யாருடைய தலைமையின் கீழ் இணைந்து செயற்பட வேண்டுமென்ற தீர்மானம் எடுத்துக் கொள்ள முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றனர். இவ்வேளையிலே மலையகத்தை வழிநடத்தக்கூடிய இளைஞர்களின் பங்களிப்பு கனிசமான அளவில் எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரை காலமும் தோட்டத்தொழிலாளர்கள் போராட்டம் நடத்தியே சில உரிமைகளை சொற்ப அளவிலாவது கிடைக்கப்பெற்றனர்.அப்போராட்டங்களும் மலையக அரசியல்வாதிகளின் அற்ப சொற்ப ஆசைகளுக்காக மழுங்கடிக்கப்பட்டுவிட்டன. இவற்றையெல்லாம் பார்த்தும் பாராமுகமாகவே மலையக இளைஞர்கள் காணப்படுகின்றனர். இதற்கு காரணம் எமது இளைய சமூகம் அடிப்படை கல்வி இன்றியே வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கின்றனர். மலையகத்தில் கட்டாயக் கல்விக்கு இடமில்லாமல் போனதும் முக்கிய காரணமாக கருதலாம். மலையக தொழிற்சங்களும் எதிர்காலம் குறித்து தீர்க்கதரிசனமான தூரநோக்குடைய கொள்கைகள் காணப்படாதனாலேயே மலையகத்தின் கல்வி வளர்ச்சியும் அந்தளவிற்கு சென்றது.

## விடியல் கருத்துக்களம்

அடுத்ததாக இன்றைய இளைஞர்களும் வேலைவாய்ப்பை கருத்திற் கொண்டு நகரங்களுக்கு இடம்பெயர்கின்றனர்.எனவே இளைஞர்கள் எமது மலையக சமூகத்தை பற்றி சிந்திக்கின்ற தன்மை குறைவாக இருக்கின்றது. இன்று வடக்கு கிழக்கு பகுதியை எடுத்து நோக்கினால் அங்கு சுயநிர்ணய உரிமைக்காக முனைப்பான போராட்டம் ஒன்று இடம்பெறுகின்றது மலையகத்தை பொறுத்தளவில் அவ்வாறானதொரு போராட்டத்தை முன்னெடுப்பதற்கான புறச்சூழல் இல்லை. எனவே ஆட்சி அமைக்கின்ற அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கிக் கொண்டு அவர்களின் செயற்பாடுகளுக்கு மட்டும் தலையாட்டி பொம்மைகளாக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஒரு அசாங்கம் அமைவதற்கான சக்தியை கொண்டிருந்த போதும் அச்சந்தர்ப்பத்தில் கூட ஒரு கோரிக்கை முன்வைத்து எங்கள் மக்களின் வீட்டுரிமை,சம்பள உயர்வு போன்றவற்றை வாங்கி தர மறந்துவிட்டார்கள். சுய லாபம் கருதியே அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டார்கள் என்று கூறும் போது மன வேதனையாகவே உள்ளது. எனவே இளைஞர்கள் இவ்வாறான பிழைகள் இடம்பெறும்போது ஏதோவொரு பொது அமைப்பிலிருந்து ஒரு தரமான அழுத்தத்தை அவர்களுக்கு கொடுக்க வேண்டும். அப்போதுதான் சம்பள உயர்வு போன்ற பிரசிசனைகளுக்கு தொழிலாளர்களுக்கு ஒரு விமோசனம் கிடைக்கும் இன்று J.V.P இளைஞரகளை கூட்டு சேர்த்தே மூன்றாவது சக்தியாக இருந்துகாண்டு நாட்டின் சகல நடவடிக்கைகளுக்கும் முட்டுக்கட்டையாகவும் அதே வேளை அடிப்படை தீர்வுகள் ஏதுற்ற அமைப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எனவே இதற்கு ஒப்பான மாற்று சக்தியாக எமது மலையக இளைஞர்கள் தோற்றம் பெற வேண்டும். இச்சக்தியானது எமது தலைமைகளுக்கு செயற்பாடுகளை முன்னுதாரணமாகவே செயற்படுத்திக் காட்ட வேண்டும். மலையகத்தில் சுய தொழில் வேளைவாய்ப்புக்களை ஏற்படுத்தி தர ஓர் அழுத்தத்தை கொடுத்து அதன் மூலம் வேலை வாய்ப்புக்களை பெற முனைய வேண்டும்.

---

## 2


S. ரவி
பதுளை


விழிப்போடு காணப்படல் முக்கிய தேவையாக இன்று காணப்படுகின்றது. அத்தோடு உலக மயமாக்களின் காரணமாக மலையக இளைஞர்கள் அதன் வசம் ஈர்க்கப்பட்டு அவ்வழியிலே தனது பொழுதை களிக்கின்றனர் இந்நிலை மாற்றப்படவேண்டும். இவர்கள் சிந்தனையை தனது சமூகத்தின் வளர்ச்சிக்காக செயல்படுத்துதல் அவசியமாகும்.

அத்தோடு சுயநிர்ணய உரிமையைப் பொறுத்தவரையில் அதனை நாம் பெற்றுக் கொள்வது அவசியமாகும். அதாவது தனது சொந்த மொழியில் பேச வேண்டும்,தான் விரும்பும் தொழிலில் ஈடுபடல் வேண்டும், நாம் விரும்பும் இடத்தில் வாழுதல் வேண்டும் போன்ற உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான போராட்ட வழியில் சிந்தனையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

மேலும் தனது தொழிலை பொறுத்தவரையிலும் மிகவும் அடிமட்டத்தில் வாழ்கின்றோம் அதாவது பொருளாதார துறையில் மலையக உழைக்கும் மக்களின் வேதனம் குறைவு நாள் கூலியாக வாழ்கின்றனர். அவர்களுக்கு சிந்திப்பதற்கு கூட வழி இல்லை இந்நிலமையை புரிந்துள்ள எத்தனையோ இளைஞர்கள் கண்மூடித் தனமாக காணப்படுகின்றனர். இவர்கள் இவர்களின் நிலமையை கூறி சிந்திப்பதற்கு வழி வகுக்க வேண்டும் அவர்களோடு இணைந்து செயல்படுவது முக்கியமான விடயமாகும்.

அத்தோடு அரசாங்க தொழிலை பொறுத்தவரை மலையக இளைஞர்கள் 1% வீதத்திற்கு குறைவானவர்களே வேளை செய்கின்றனர் இது நமது உரிமை மறுப்பாகும் இதனை படித்த இளைஞர்கள் ஒன்று கூடி இதற்கான தீர்வை காண செயல்பட வேண்டும், இதிலும் ஆசிரியர்களே அதிகம் ஏனைய துறைகளை பொருத்தவரை குறைவான வீதமே காணப்படுகின்றது.

அடுத்ததாக மலையக மக்களின் தொகை இன்று கணிசமான அளவு குறைந்து வருகின்றது. இந்நிலை தொடருமானால் மலையக இனமே அழியக் கூடிய அபாய நிலை காணப்படுகின்றது. இதுவும் ஒரு திட்டமிட்ட இன அழிப்பாகவே காணப்படுகின்றது. இதனை கூட நாம் அறியா மக்களுக்கு எடுத்துக் காட்டி நமது இனத்தை காக்க செயல்பட வேண்டும்.

நாம் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்கை பெற்று தருகின்றோம் ஆனால் சுரண்டப்படும் மக்களும் நாமே ஆகவே நாம் அனைவரும் ஒன்றுக் கூடி, ஒரு சிறந்த நல்லதொரு தலமைத்துவத்தை கட்டியெழுப்புதல் அவசியமானதாக உள்ளத.

ஆகவே மலையகத்தில் சில படித்த இளைஞர்கள் தான் வாழ்ந்தால் சரி என்று எண்ணாமல் தமது சமூகத்தைப் பற்றி ஒவ்வொரு நிமிடமும் சிந்திக்க வேண்டிய கட்டாய தேவை ஏற்பட்டுள்ளது இல்லையாயின் இன்னும் இருபது வருட காலப்பகுதியில் நாம் ஏனைய சமூகத்தோடு ஒப்பிடும் அளவில் மிகவும் ஒரு தாழ்வான நிலைக்கு தள்ளப்பட்டு விடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே அனைவரும் ஒன்று கூடி ஜாதி,மத,கட்சி பேதமின்றி ஒரு சிறந்த தலைமையை கட்டியெழுப்புதல் வேண்டும் காரணம் ""இன்றைய இளைஞர்களே நாளைய தலைவர்கள்"" இளைஞர்களே மலையக மண்ணை ஒரு சிறந்த தலமாக ஆக்குவதற்கு உரித்தானவர்கள் என்பதை மறந்து செயல்படாமல் சமூகம் பற்றி சிந்தனையை வளர்த்து நல்ல வழியில் செயல்படுதல் அவசியமாகும்.

---

# 3

A. பிரேம்குமார்
பொகவந்தலாவ.

"மலையகம்" கேட்பதற்கு இயற்கையோடு கூடிய ரம்மியமான சொற்றொடர். ஆனால் 200 வருடகால வடுக்கள் இன்னும் எம் அகத்தில் இன்னும் நீங்கவில்லை, எம்மவரை அழைக்கப்பட்ட போதும் ஏமாற்றம். அழைத்து வருகின்ற போது படகுகாரனால் ஏமாற்றம். வேலைக்கு அமர்த்திய போது கருப்பு துரை,வெள்ளை துரை வரை சுரண்டலுக்கும்,கூலி எனும் பதத்திற்கும் மட்டுமே உரித்துடையவர்கள் என்பதில் இன்றுவரை இதனை மறுப்பதற்கும்,மறைப்பதற்கும் ஆதாரம் இல்லை இத்தனை கபட நாடக வேசதாரிகள் மத்தியில் அரசியல் வாதிகளின் அதிகார வெறியாட்டம்,உரிமைகள் மறுக்கப்பட்டு உருக்குலைந்த மலையகத்தை புரட்சிகர உருமாற்றம் செய்து புதிய உத்வேகம் அளிக்கும் கடமை இன்றைய இளைஞர் கைகளில் தான் உள்ளது. எமது உரிமைகளையும்,உடமைகளையும் பெற்றுக்கொள்ள சாத்வீக வழிகளில் குரல் கொடுக்க வேண்டும்.

எல்லை கடந்தால் மாற்றுவழிகளையும் சிந்திக்க வேண்டும். எமது ஆரம்பகால வரலாறு போராட்டம் நிறைந்தது. பேரினவாதிகளை நடுங்க செய்தது ஆனால் எமது அரசியல் தலைமையால் அப்போராட் டங்கள் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டுள்ளது. இத்தகைய பொறியில் இன்றைய இளைஞர்கள் சிக்கிவிடக் கூடாது. பதினைந்து லட்சம் மக்களின் உள்ளகிடக்கைகளை ஆய்ந்து ஆராய வேண்டும் எமது அடிப்படை உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் அளைஞரின் கோபம் சோடா போத்தலின் கேஸ் போன்றது என பல தமிழ் தலைவர்கள் கூறினார்கள் ஈழம் காணும் போராட்டம் 25வருடங்களின் பின் இன்று நனவாகிறது. எனவே இளைஞர்கள் என்பவர்கள் இன்றைய காலகட்டத்தை பொறுத்தவரை பார்வையாளர் பட்டாளமாக தொழிற்படவில்லை. பங்காளிகள்ாக தொழிற்படுகின்றனர் நாளைய மலையகம் காண தங்களை இன்று நன்கு தயார்படுத்தியுள்ளனர் என்பதில் ஐயமில்லை எதிர் கால முன்னேற்ற பாதையை நன்கு தூர நோக்குடன் சிந்திக்கின்றனர் மேலும் மலையகத்தில் கல்வி, சுகாதாரம், கலை, கலாசாரம்விழுமியங்கள் என்பன பின்னோக்கி நகர்த்தப்படுகின்றன. என உரையரங்கு முதல் அரசியல் அரங்குவரை நன்கு அழுத்தி எம்மவர்கள் கூறுவார்கள் கூறிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

இந்த விடயத்தையும் விஞ்ஞான பூர்வமான ஆய்வுக்குட்படுத்தல் வேண்டும் காரணம் எதிர்கால மலையகத்தை சிந்திக்கும் நாம் கடந்து வந்த மரணப்பாதையை மறந்து விட கூடாது சுகாதார துறையை நோக்குவோம் ஆனால் 1872ம் ஆண்டில் பல எதிர்ப்புகளுக்கிடையில் நிறைவேற்றப்பட்ட 14ம் இலக்க மருத்துவச் சட்டம் அரசாங்கம் தனது தலையிடாக் கொள்கைக்கு மாறாகத் மலையக தொழிலாளர்களின் மருத்துவ வசதிகளை கருத்திற் கொண்டு மேற் கொண்ட முதலாவது சட்ட நடவடிக்கையாகும் இத்தனை எதிர்ப்புகளால் எத்தனையோ இன்னல்களால் பெற்றெடுத்த பல உயரிய சாதனைகள் உண்டு இதனை ஓர் உதாரணமாக கொண்டு இவ்வாறான அடிப்படை உரிமையான கல்வியையும் நாம் பெற்றெடுத்து கொள்ள நாம் நம்மை தயார்படுத்தியாக வேண்டும் அரசாங்க தலைமைகளுக்கு அழுக்கம் கொடுக்க கூடிய சக்தியாக தொழிற்பட வேண்டும் எமது கலை கலாசாரம் வாயிலாக மலையக விடுதலையை போதிக்க வேண்டும் எத்தனை விமர்சனங்கள் வந்தாலும் இளைஞர் ஆகிய நாம் சோர்ந்துவிடலாகாது எதிர்கால முன்னேற்ற பாதையை இளைய சமுதாயம் மிகவும் உன்னத நிலையை நிலை நிறுத்தும் என்பது வெள்ளிடை மலையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றும் மனிதர் போற்றட்டுமே நெஞ்சில் பொறுமை இல்லாதவர் தூற்றட்டுமே எமது கடமைகளை சலைக்காது செய்வோம் மலையகம் உறங்கி கொண்டுள்ளது உறங்கட்டும் விழிக்கும் போது பலரின் உறக்கத்தை கெடுக்கும் இதுவே உண்மை உறக்கத்தை களைத்து எதிர்கால சமுதாயத்திற்கு உரம் ஏற்றுவது இளைஞனின் கரங்களில் உள்ளது.

# குறிஞ்சி தேனீகளே

அ. பரமேஸ்வரி

நீங்கள்
சுமப்பது கூடையை
மட்டுமல்ல - இந்த
தேசத்தையும் தான்

உங்கள் தேடல்கள்
இந்த தேசத்தால்
அபகரிக்கப்படுகின்றது

நீங்கள் பறிப்பது
பசுமையான கொழுந்துகளை
மட்டும் தான்
பறிகொடுப்பது.?

ஊதியம் குறைவான
உழைப்பு உங்களிடம்
மட்டுமே

உங்கள் ஊதிய
மீதிகளால்தான்
உற்ற நம் தேசம்
ஊட்டம் பெறுகிறது.

லாவண்ய வாழ்க்கை
திருடப்பட்டுத்தான்
லாபம் பெறப்படுகின்றது.

உங்கள் உரிமைகளுக்கு -
ஊறு
விளைவித்துதான் - உற்ற
தேசம்
உயர்வு காண்கிறது.

உன்னில்
சுரண்டப்படுவதை
வைத்துதான்
பெரிச்சா எலிகள்
பேரம் பேசுகின்றன

உதவா
பங்காளிகள் தான்
உங்கள் பங்குலாபங்களை
அபகரிக்கின்றார்கள்.

குறிஞ்சித் தேனீகளே
வருத்திகளான உங்கள்
மயான பயணத்தில்

தனக்கே தெரியாமல்
தாண்டியாய் செயற்பட்ட
இந்த தேயிலை
செடிகள்

உங்களுக்காக
உண்மையாய் கண்ணீரை
கசியச் செய்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சார்பற்ற நிறுவனங்களும் (N.G.O) மலையக இளைஞர்களும்

**பா. தியாகராஜா**

மலையக சமுகத்தை பொறுத்தமட்டில் இன்று N.G.Oக்களின் எண்ணிக்கைகள் பல காணப்படுகின்றது. அவ்வாறு காணப்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்களின் நோக்கத்திற்கு ஏற்றவாறு செயற்பாடுகளை மேற்கொள்கின்றதா? மலையகத்தை பொறுத்தமட்டடில் விரல் விட்டு எண்ணக்கூடிய அரச சார்பற்ற நிறுவனங்கள் ஏதோ ஒரு வகையில் ஆக்க பூர்வமான பணிகளை மேற்கொள்கிறார்கள்.

எஞ்சியிருக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆக்கபூர்வமான பணிகள் தான் என்ன? அவற்றின் இளைய சமுகத்தின் பால் அக்கறை கொண்ட செயற்பாடுகள்தான் என்ன?

வெறுமனே கருத்தரங்குகள் என திட்டம் வகுத்து இளைஞர்களை மடமைத்தனப்படுத்தும் பாரிய பங்கினை இந்த **N,G.O**க்கள் தான் செயற்கின்றன கருத்தரங்குகளில் இனம் காணப்படும் முற்போக்கு எண்ணம் கொண்ட இளைஞர்கள் இந்த N.G.O கார்களால் ஒரங்கட்டப்படுவதும், ஏனைய இளைஞர்களை சுயநல போக்கில் தங்கள் பயன் படுத்திக் கொள்வதும் பெரும் பாலும் இடம் பெறுகின்றது.

<u>இவ்வாறு காணப்படும் மலையக N.G.O.களின் சுயநல போக்குத்தான் என்ன?</u>

- ✔ பெயரளவில் திட்டங்களை தீட்டி, போலி ஆவணங்களை தயாரித்து வெளிநாட்டு நிறுவனங்களில் பணம் வசூலித்துக்கொள்கிறார்கள்.
- ✔ தங்களின் அரசியல், தொழிற்சங்க நடவடிக்கைகளை வளரத்துக் கொள்ள அரச சார்பற்ற நிறுவனங்களை பயன்படுத்திக் கொள்கிறார்கள்.
- ✔ வெளிநாட்டு உதவி பணங்களை கொண்டு உல்லாச, சொகுசு வாழ்க்கையினை வாழ்கிறார்கள்.
- ✔ அரசியல் கட்சிகள் போன்று சமுகத்தில் பிளவுகளை ஏற்படுத்துவதாக செயற்பாடுகளை அமைத்து விடுகிறார்கள்.
- ✔ 2ம் தலைமைத்துவம் வளர்வதை விரும்பாத இந்த N.G.Oகள் இளைய சமுகத்தை ஓரங்கட்டுவதில் முனைப்பாக செயற்படுகின்றது.

இவ்வாறான தன்மைக்கு அப்பால் விதிவிலக்காக செயற்படும் N.G.Oகளின் பணிகளை நாம் கௌரவமாக மதிக்கின்றோம். போலியாக செயற்படும் N.G.Oகள் (பெயரளவில்) தங்கள் கவனத்தை இந்த மலையக சமுகத்தின் பால் செலுத்தி சுயநல போக்கினை தவிர்த்து செயற்படல் வேண்டும். என்பதோடு ஆக்க பூர்வமாக இளைய சமுகத்திறுக்கான திட்டங்களை வகுத்து செயற்படல் வேண்டும். அவ்வாறயின் எவ்வகையான திட்டங்களை தீட்டலாம்.

- இளையஞர்களின் அறிவு திறனை விருத்தி செய்து சமுகவுணர்வை ஏற்படுத்துதல்.
- சுயாதீனமாக இளைஞர்கள் ஒன்றினைய ஒத்துழைப்பை வழங்குதல்.
- கல்வி, தொழிற்கல்வி, சுயதொழில் கல்வி என்பவற்றில் ஆக்கபூர்வ திட்டங்களால் விருத்தியடையச் செய்தல்.
- சமுக உணர்வில் எழுச்சியான செயற்பாடுகளில் பங்கேற்க துண்டுதல்.
- மலையக சமூக ரீதியில் இளைஞர் சமுகம் முக்கிய அம்சம் குழுவாக செயற்பட வழிவகுத்தல்.
- சிறந்த பொழுது போக்கு அம்சங்களை ஏற்படுத்தி அதனோடு தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ள வழியமைத்தல்.

மேற் கூறப்பட்ட விடயங்களுக்கு மலையக N.G.O கள் முக்கியத்துவம் கொடுத்து மலையக இளைய சமுகதின்பால் அக்கறை செலுத்த வேண்டும். குறிப்பாக இவைகள் நீண்ட உத்தரவாதத்துடன் ஆக்க பூர்வ சிந்தனையில் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்த வேண்டும். இங்கு பெயரளவு தம்பட்டங்கள் தவிர்க்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்லோயா இளைஞர் விளையாட்டுக் கழகம்
தனது ஏழாவது ஆண்டை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில்
மலையக இளம் கவிஞர்களிடையே நடாத்திய கவிதைப் போட்டியில்
மூன்றாமிடம் பெற்ற கவிதை.**

# விடியலை நோக்கி விரைவோம்

**து. லூபாகரன்
ஸ்ரீ பாத தேசிய கல்வியியற்
கல்லூரி**

விடியலில் விடிவை - தேடி
விரக்தியுற்றிருந்த வீரத்தமிழனின்
வீரங்கள் வீணாக வில்லை
வீழ்ந்து போகவும் இல்லை

விடியலின் விழி
விழித்துக் கொண்டது
வீரத் தமிழனின்
வீர சாகசங்களுக்காக்

வஞ்சகத்தினால்
வஞ்சிக்கப்பட்ட வான்மை
தமிழனின் வாழ்க்கைக்கு
வசந்த காலம் வந்து விட்டது

பொங்கு தமிழின் பொங்கிய
உணர்வலைங்கள் - தாழவில்லை
மலையகம் வனர
மலையேறிவிட்டன

சமாதான காற்று சம்மதித்து
புறப்பட்டு விட்டது
புரையோடி போயிருந்த
போரினை போக்குவதற்கு

அடையாள அட்டைகளின்
அட்டகாசங்களும் - அழிந்து
போய்விட்டன.

வீதி தடைகளின் வீண் பேச்சு
விழ்ந்த விட்டன

இரண்டு தசாப்தங்களாக
இருண்டு கிடந்த - இன்னல்களும்
இருண்டு விட்டன


தமிழன் தலைமை
தலை வணங்காததால்
தமிழனும் தலை நிமிர்ந்து விட்டான்

விண்ணில் வெடிக்கும் வெடிகளும்
காலில் வெடிக்கும் கன்னி
வெடிகளும் கழியுகத்தோடு
களைந்து போய்விட்டன

புது வருடத்தில் புதுயுகம்
பூக்கட்டும்.....

பன்னெடுங்காலமாக பஞ்சத்தினால்
பட்டினி சிடந்து
பயத்தினால் பங்கரில் - கிடந்த

துயரங்கள் பறந்து விட
பகலவன் உதயமாகிவிட்டான்
விடிவில் உயர்வுகாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புறப்படுவோம்.

பா. ஜெயரட்னம்.

மலைகளின்
யௌவனங்களே
புறப்படுங்கள்

நிகரை நோக்கிய
நகர்விற்கு - நல்
ஆயத்தமாய்
எம் - புறப்பாடுகள்
அமையட்டும்

துயில் புறம்
போகட்டும் - வீர
விழுதுகளாய்
விடை தேடுவோம்

அடிமை
விலங்கை
அறுத்தொறியவும்
சரிநிகர் சந்தம் பெறவும்
எதிர் நீச்சலுக்காய்
துடுப்பெருப்போம்

துன்பக் கணைக்களை
தகர்த் தெறிந்து
நிறைகாண
நிதானமாய்
புறப்படுவோம் மடமைகள்
நிர்மூலமாக்கி
குவலய
இராட்சியத்தில்
குறையாத - நிலை
எம்மவர் பெற்றிட
ஏற்ற நல்
வழிதனில் - எம்
பயணம் தொடங்கட்டும்

மாற்றம்
மாற்றம் - என
மாறுவேடம்
போட்ட மாரிசங்களுக்கு
பாடம் புகட்டிட
புதியன
மொழிவோம்

ஊட்டங்கள்
உட் கொள்ளவும்
வாட்டங்களாய்
உடல், உளம்
வளர்ச்சி பெறவும்
ஏற்ற
வழி நோக்கி
புறப்படுவோம்.

## முகட்டின் முற்றத்தில்

அருணா

முகட்டின் முற்றத்தில்
முழுமையான விடியல்
எப்போது
பிரகடணமாகப் போகிறது

ஒவ்வொரு
பொழுதின் நகர்வுகளும்
நீதி மன்ற
தவனைப்போல்
முகட்டின் விடியலுக்கு
வியாக்கியானம்
கூறுவதாய்

மூர்க்க மிகு
முகடுகளே
மாற்றத்திற்கு என்ன வழி?

எத்தனை
புலர்வுகள் தான்
ஏமாற்றத்தின்
விளிம்புகளில்

ரம்மியமான
முகட்டில் முற்றத்து
சாகியம்
ரணங்களை
மட்டுமே
சுமக்கின்றது.

உதயங்களும்
அஷ்த்தமிப்புக்களும்
உலக நியதியாய்
ஏன்?
அஷ்த்தமிப்புக்கள்
மட்டுமே - எங்களுக்கு
சொந்தமாகின.

வினாக்கள் தான்
தொடர்கின்றன
விடைகள் தேடுவது
யார்.?

குறுகிய எண்ணத்தால்
விடைகள்
வினா தரப்பில் மட்டுமே
தேடப்படுகின்றன.

விடைகள் பக்கம்
எம் மைந்தர்கள்
வாசம் கொள்வதே
இல்லையே!

எதிர்பார்ப்புக்கள்
போதும் - எம்
வழியே விழி
துணையாகட்டுமே

முகட்டின்
முற்றத்தில் வினைத்
திறனாய்
"விடியல் - பரினமிக்க"
தூரநோக்காய்
துனிந்து புறப்படுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லோயா இளைஞர் விளையாட்டுக் கழகம் தனது ஏழாவது ஆண்டை முன்னிட்டு மலையக இளம் கவிஞர்களிடையே நடாத்திய கவிதை போட்டியில் பரிசு பெற்றோர்.

**1. முதலாமிடம்**
வெ. கணேசலிங்கம்
நோர்வூட் (நியூவெளி)

**2. இரண்டாமிடம்**
எஸ். மனோஹரன்
ஸ்ரீ பாத தேசிய கல்வியியற் கல்லூரி
பத்தனை.

**3. முன்றாமிடம்**
ஜெ. லூபாகரன்
ஸ்ரீ பாத தேசிய கல்வியியற் கல்லூரி
பத்தனை.

**ஆறுதல் பரிசுகள்**

1. செல்வி .A. பிலோமினா
**ஊவாக்கெல**
**லிந்துல**

2. பூ. சிவசக்தி
**சின்ன மடடக்கலை**
**தலவாக்கலை**

3. L. குவேனி மலர்
**மெல் பொட் எஸ்டேட்**
**புஸல்லாவ**

4. கா. கருணாகரன்
**நோர்வூட் சீ. பீ.**
**நோர்வூட்**

5. எஸ். ரஜனிகாந்
**ஸ்ரீ பாத தேசிய கல்வியியற் கல்லூரி**
**பத்தனை.**

6. A.H. பாத்திமா ரிஸானா
**இல. 144, அறவ்வாவல,**
**ஹந்தஸ்ஸ**

7. வாசுதேவன் ஆனந்தராஜ்
**புறட்டொப் மேமலை**
**இறம்பொடை**

8. சுப்பிரமணியம் செல்வா
**டயகம மேற்கு [4]**

9. பொ.சா. வளர்மதி
**இம்புல்பிட்டி மே.பி**
**நாவலப்பிட்டி.**

## ஐ.கூ. கவிதைகள்

ஈழ குன்றுகளில் குழியிட்டு
நாட்டிய பண மரங்கள்
தேயிலைச் செடிகள்

நிரமற்ற நீர்
வெண் நிறம் பெற்றது
வீழ்ச்சி

இறங்கிச் சென்றே
பணிகள் செய்யும் மாது
கங்கை

மனிதன் போடாத பந்தலில்
மலர்ந்து மின்னும் புக்கள்
நட்சத்திரங்க்ள

பாவம் எதற்காக அவனுக்கு
இரண்டு கண்கள்
குருடன் முகத்தில்

S. ரஜனிகாந்
நோர்வூட்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா

உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா

களி படைத்த மொழியினாய் வா வா வா

கடுமை கொண்ட தோளினாய் வா வா வா

தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா

சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா

எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா

ஏறுபோல் நடையினாய் வா வா வா

பாரதி

Design By **DCS** - N-Pitiya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org